454

குர்ஆன் விளக்கம் 10 இ. இ. வெ. 47

# கோஷா-பர்தா

என்றால்

பயங்கர அடிமைத்தனம் கூடிய

ஜெயில் வாசம்

தானா?

by

‘குலாம்’,

இஷாத்தே இஸ்லாம்

பதிப்பகம்,

ஆத்தூர், (சேலம்).

> விசுவாசிகளே! உங்களிடம் விஷமி (ஒரு
> வன் அவன் தீயவனேயாயினும் அவன்)
> கொண்டுவரும் செய்தியை(யும்) நீங்கள்
> தீர விசாரித்து (உண்மையை)த் தெரிந்து
> கொள்வீர்களாக—" (குர்ஆன் 49 : 6)

இவ்வுபதேசத்தை ஒட்டி இந்நூலைப் பரிசீலிப்பீர்களாக. [இ. இ. ப.]

# GOSHA OR VEIL

## IS IT SLAVERY & JAIL LIFE?

Published by
PEACE PROPAGATION PUBLISHERS,
Atur, Salem.

Q7:4
M52
177201

1952 0-14-0

# கோஷா-பர்தா
என்றால்
# பயங்கர அடிமைத்தனம் கூடிய
# ஜெயில் வாசம்
# தானா?

குர்ஆன் 33 : 30, 31, 32, 33, 53, 59; 24 : 30, 31;
விளக்கம்.

## கோஷா-பர்தா-முகமூடி.
## இவைகளுக்கு குர்ஆன் ஆதாரங்களாவன:-

1) "மாதர்களே! நீங்கள் இல்லங்களில் தனித்திருங்கள்! மூர்க்கிய மூட நாட்களில் நடந்துகொண்டதே போல் உங்கள் வனப்பைக் காண்பித்துத் திரியாதீர்கள்."
(குர்ஆன் 33 : 33) (ப. பி.)

2) "நீங்கள் ஸ்திரீகளிடத்திலிருந்து யாதொமொரு பொருளைக் கேட்கவேண்டுமாயின், திரைக்கப்பாலிருந்து கேளுங்கள்."— (குர்ஆன் 33 : 53) (ப. பி.)

3) "மூமினான ஸ்திரீகள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்தும்படியும், மர்மஸ்தானங்களைக் காத்துக்கொள்ளும்படியும் நீர் அவர்களுக்கு சொல்வீராக" (குர்ஆன் 24 : 31) (ப. பி.)

4) "பெண்கள் வெளிக்காட்டற் கூடுமான சவுந்தர்யங்களைத் தவிர்த்து மற்றவற்றின் சௌந்தரியத்தை வெளிப்படுத்தக் கூடாது" (குர்ஆன் 24 : 31) (ப. பி.)

5) "எ நபியே! உமது மனைவிமார்க்கட்கும், உமது பெண்களுக்கும், இதர மூமினான பெண்மணிகட்கும் அவர்கள் எல்லாம் தங்கள் போர்வைகளைத் தங்கள் மீது மூடிக்கொள்ளவேண்டுமென்று சொல்வீராக." (குர்ஆன் 33 : 59)

இவைகளை (முன் பாகத்தில் விவரித்துள்ளபடி) 'பர்தா பிரமாணங்கள்' என்னும் நூலில், ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர், மௌ

லவி அஹ்மத் ஸயீத் சாஹிப் அவர்கள், பர்தா, அதாவது அனுஷ்டானத்திலுள்ள கோஷா முறைக்கு ஆதாரப் பிரமாணங்களைக் [illegible] வியாக்யானஞ் செய்துள்ளார்.

மேற்படி ப. பி. (=பர்தா பிரமாணங்களி)ன் ஆசிரியர் தன் முகப்பிலேயே, மேற்கண்ட குர் ஆன் உபதேசங்களுக்கு இரத்னச் சுருக்கமாக,

"முஸ்லிம் பெண்கள் கோஷா-பர்தா முறையைக் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டும்;"

என்றும்,

கோஷா-பர்தா முறை யென்றால்,

"அன்னிய ஆடவர்களின் கண் பார்வைக்குச் சிக்காமல் வீடடங்கி இருக்கவேண்டும்; வெளியிற் செல்லவேண்டிய அவசியமான நிர்பந்தமேற்பட்டால் துப்பட்டிப் போர்த்தி முகமூடி அணிந்துச் செல்லவேண்டும்"

என்று(ம்) நம் திருமறையாம் குர்ஆன் ஷரீபும், எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமொழியும் பகிரங்கமாகவும் தெளிவாகவும் முஸ்லிம்களுக்குக் கட்டளையிடுகின்றன," என்றும் விளக்கியுள்ளார்.

இதுபற்றி முன் முதல் பாகத்தில் மேலே கண்ட குர் ஆன் பிரமாணங்களைக்கொண்டே, 'பர்தாப் பிரமாணங்களி'ன் வியாக்யானப்படி முடிவு கட்டப்பட்டு அனுஷ்டானத்திலுள்ள

(1) கோஷா முறையை முஸ்லிம் பெண்கள் அனுஷ்டிக்கக் கட்டாயப்படுத்தபடவில்லை, யென்றும்,

(2) வீடடங்கிக் கிடக்கத்தான் வேண்டுமென்பதில்லை, யென்றும்

(3) வெளியிற் செல்லுங்கால் 'துப்பட்டிப் போர்த்தி முகமூடி அணிந்து'தான் செல்லவேண்டும் என்பதில்லை, என்றும் விளக்கப்பட்டது.

மேலே காட்டப்பட்டுள்ள 5 குர்ஆன் பிரமாணங்களும் ப. பி. ஆசிரியரின் மொழி பெயர்ப்புகளை ஆகும். இவ்வாசிரியர் இப்பிரமாணங்களை நாணயமாக மொழி பெயர்க்கவில்லை (யென்பதும் பின்னர் விளங்கும்). என்றாலும், அவருடைய மொழி பெயர்ப்பின்படியே பார்த்தாலும், மொழி பெயர்ப்பாளரின் முடிவுபடி மேற்படி குர்ஆன் பிரமாணங்களில், பெண்கள் (1) வீடடங்கித்தான் கிடக்கவேண்டுமென்பதற்கோ, (2) வெளியிற் செல்லும் பொழுது துப்பட்டிப் போர்த்தி முகமூடி அணிந்துதான் செல்லவேண்டுமென்பதற்கோ, ஏதாவது ஆதாரம் கிடைக்கின்றதா வென்று பார்த்தாலும் கிடைக்கவில்லை (யென்பதையும் முன் முதல் பாகத்தில் கண்டோம்).

உண்மை இப்படி இருக்க, சந்தேகத்துக்கிடமற்றதும் தெளிவானதுமான மேலே காட்டப்பட்ட 5 குர்ஆன் பிரமாணங்களுக்கும் கீழ்க் கண்டவாறு எல்லாம் வியாக்யானம் செய்து, 'பர்தா-கோஷா வென்றால் பயங்கர அடிமைத்தனத்துடன் கூடிய ஜெயில்வாசம் தான்' என்று நினைக்கும்படி தீர்ப்புகள் பல கூறி வைததிருக்கின்றனர், நம் முன்னோர்கள். இவைகளை தெய்வ வாக்காகவே, குர்ஆன் கட்டளைகளென்றே மதித்து, நம் ஸைபுல் இஸ்லாம் ஆசிரியரும், தன் பகுத்தறிவையும், ஆராய்ச்சித் திறனையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அனுஷ்டானத்திலுள்ள கோஷா-பர்தா முறையை தெய்வக் கட்டளையென்றே விவாதிக்கின்றார்கள்.

குர்ஆனில் கண்ட

'தலைமூடி' அல்லது 'துப்பட்டி' அல்லது 'போர்வை' அல்லது 'மூடாக்கு' என்ற கருத்து கொண்ட பதத்திற்கு, 'பெண்கள் தங்களை மூடிக்கொள்ளவேண்டும்' என்றும், "நீங்கள் இல்லங்களில் தனித்திருங்கள்" என்றுள்ள குர்ஆன் வாக்கியத்துக்கு,

1) "சர்வாங்கமும் மறைக்கப்பட வேண்டியவளாயிருக்கின்றாள்".

2) "பெண் "முழுதும் மறைத்து வைக்கக் கூடிய பொருள்".

3) 'வெளியில் திறந்து போட்டுவிடவேண்டிய அங்கம் (பெண்பாலில்) ஒன்றுமில்லை".

4) "பெண்ணரசிகள் ஆடவரை, அதுவும் ஓர் அந்தகரையும் கூட பார்த்தல் கூடாது".

5) "அடிமையில்லாத பெண்ணின் தலை கூந்தல் தொடுத்து பாதத்தின் நகம் வரைக்கும் யாவும் மறைக்கவேண்டிய (பெண்) 'அவ்ரத்'தேயாகும்".

6) "பெண்களே!! இல்லங்களில் உறைந்து இருக்க வேண்டும்".

7) "அன்னியரைப் பார்க்காதபடி ஸ்திரீயின் கண் குருடாயிருக்கட்டும்".

8) "வீட்டிலிருந்து வெளிப்பட்டால் அவள் (புதைக் குழியாகிய) கப்ருக்குப் போகவேண்டுவதற்கே வெளிப்படவேண்டும்".

9) "ஸ்திரி அன்னிய ஆடவர்களை இச்சை கொண்டும், இச்சை இல்லாமலும் பார்த்தல் கூடாது".

10) "அவள் ஓராடவனைப் பாராமலும், ஓராடவன் அவளைப் பாராமலுமிருப்பதே" சரி.

11) "பெண்டிர் ஆடவரைப் பார்க்காமலிருப்பதற்காகத் தங்கள் இல்லங்களின் சுவர்களிலுள்ள ஜன்னல்களையும், துவா

ரங்களையும் அடைப்போரா யிருந்தார்கள்". (நாமும் அடைக்கவேண்டும், ஸஹாபாக்கள் செய்து வந்தது போலவே).

12) "முஆது (ரலி) அவர்கள் தம் மனைவியார் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தற்காக அவரை அடித்தார்கள்".

(அப்படியே நாமும் அதை ஒட்டி அடிக்கவேண்டும்.)

13) "தன் மனைவி வீதிக்குச் செல்லாமலும் வைத்துக் கொள்வதே உரோவஷத்தின் மார்க்கம்".

14) "சுதந்திர முள்ள ஸ்திரி—சர்வாங்கத்தையும் மறைப்பது கடமை"

15) 'ஏழைப் பெண்களுடைய பாதங்கள் தெரியலாம்' (என்பதில் ஏழையில்லாதவர்களின் பாதங்களும் கூட தெரியக் கூடாது என்பதே பொருள்.)

16) "ஸ்திரிகள் வீட்டை விட்டு வெளியே புறப்பட வேண்டிய நிர்பந்த மேற்பட்டால்,

1 சிஹிச்சை செய்து கொள்ளவும்,
2 அதிகாரிகள் முன்பு சாக்ஷியம் கூறவும்,
3 பிரயாது செய்வதற்கும்,
4 தன்னை விவாகம் செய்துகொள்ள விரும்புகிறவனை நாடியும்,
5 நிக்காஹ் செய்துகொள்ளுவதற்கும்,
6 (ஏழைக்கு) உதவிக்கு ஆடவனில்லாத பொழுதும்,
7 மஸ்ஜிதக்குப் போக அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தும், (இவ்வுரிமை ப. பி ன் படி ரத்தாகிவிட்டது).

17) "அழுக்காடை அணிந்து",
18) "கிழவிகள் கோலம் பூண்டு".
19) "மேலே துப்பட்டி போர்த்தி",
20) "முகமூடி அணிந்து",
21) "ஒரு கண் பார்வையாக",
22) "தன் குரலைக் காட்டாமல்",
23) "தங்களைப் பார்ப்பவர்கள் அடையாளந்தெரிந்து கொள்ளக்கூடாத விதமாய்",
24) "ஒரு ரூபம் போல்",
25) "வீதிகளில் பரவலாகப் போகாமல் சுவற்றில் தங்கள் புடவைகள் ஒட்டிக்கொள்ளும் விதமாய்", அதுவும்
26) "இருட்டான இராக்காலங்களில்",

தான் வெளிக்கிளம்பவேண்டும்,

என்றெல்லாம்வியாக்யானஞ் செய்த, அவைகளை குர்ஆன் கட்டளைகளாக மதித்து நடக்கவேண்டுமென்று செய்துவிட்டிருக்கின்றனர்.

ப. பி. ன் வியாக்கியானப்படி மேலே கண்ட கோஷா—பர்தா விதிகளுக்கு, சம்பந்தப்பட்ட குர்ஆன் பிரமாணங்களில் கிஞ்சிற்றும் கற்பனை செய்யவும் இடமில்லை யென்றும், எல்லாம் குர்ஆன் பிரமாணங்களுக்கு எள்ளளவும் சம்பந்தப்படாத விதிகளே வென்றும் விளக்காமலே விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

அப்படியானால், இவையனைத்தும், பொய்யும் புரட்டும், கற்பனைகளுமா என்று கேட்கத் தோன்றும். இவையனைத்தும் மநுதர்ம விதிகளையும் தோற்கடிக்கக் கூடியதாக விருக்கின்றனவே வென்றும் தோன்றும்.

எது எதுவானாலும், பர்தா கோஷாவுக்காகப் 'பர்தா பிரமாணங்கள்' என்னும் நூலில் காட்டப்பட்ட குர்ஆன் பிரமாணங்களனைத்தையும் பரிசீலனை செய்து பார்த்ததில், மேற்படி விதிகளுக்கு எவ்வகையிலும் இடமுண்டா வென்றெழும் கேள்விக்கு, இல்லை, முக்காலும் இல்லை, கிஞ்சிற்றும் இல்லை யென்று கண்டீர்கள், சந்தேகத்திற்கிடமில்லாமல்.

என்றாலும், அக்குர்ஆன் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டுதானே இவ்விதக் கொடூரமான, மநு நீதி[5]—பைபிள் விதி[5]களையும் விழுங்கிவிடக்கூடிய விதிகளைக் கற்பித்திருக்கின்றனர் என்று நீங்கள் பிரமிக்கத் தான் செய்வீர்கள். இது பிரச்னையிலுள்ள விஷயமல்ல வாகையால் இது பற்றிய பிரச்னையைப் பின் விசாரிக்கலாம், வசதி கிடைக்கும்பொழுது.

ஆனால், உங்களை உங்கள் மௌலவிகள் சும்மாவிருக்க விடமாட்டார்கள் தான். ஹதீஸ்களும், முன்கால அறிஞர்களுடைய தீர்ப்புகளும் வியாக்யானங்களும் அனைத்தும் பொய்யா, புரட்டானதா, ஏற்றுக்கொள்ளக் கூடாதனவா வென்றெலாம் கேட்டு உங்கள் மூளையைக் குழப்பி விடுவார்கள். என் நூல்களை ஷைத்தானுடையது, அவைகளைத் தொடுவதும், பார்ப்பதும் பாபம் (=ஹராம்) என்பார்கள், பார்த்தால் உங்களை ஏசுவார்கள்; பாமர மக்களை, அவர்களால் பெரிய தனக்காரர் என்று கருதப்படும் பாமரத் தலைவர்கள், ஏவி விட்டு உங்களைத் துன்புறுத்துவர்.[6]

---

5 'பாரத குமாரி' அல்லது இந்திய ஸ்திரீகள் விபச்சாரியா—பிசாசா?' என்னும் ஹிந்து—முஸ்லிம் கிறிஸ்துவ மதங்களின் ஆராய்ச்சிக் குவியல் ஆகிய 1932ல் வெளியான இ. இ. வெ. 2ல் விபரம் காண்பீர்கள். (இ. இ. ப.)

6 இங்கிலையில் 'நமக்கு என்ன நடக்கும். நாம் என்ன

உண்மைக்காக தியாகம் செய்யத் துணிவிருந்தால், நீங்கள் மேற்படி ஆலிம் மௌலவிமார்களுக்குச் சொல்லவேண்டியதெல்லாம்:—

'குர்ஆனுக்குப் பொருந்தாதவனைத்தையும் ஹதீஸ் என்று ஏற்றுக்கொள்ளக்கூடாது; அவை கறட்டுன யென்று ஒதுக்கப்படத்தக்கன', என்ற கருத்துடைய ஹதீஸ் ஒன்றுள்ளதை யாரும் இதுவரை மறுக்கவில்லை; மறுக்கமுடியாது; அது சந்தேகமற்றதும் குர்ஆனுக்கு முழுக்க முழுக்க ஒத்ததுமான ஹதீதாகும். ஆகையால் பர்தா பிரமாணங்களாகக் காட்டப்பட்ட குர்ஆன் பிரமாணங்களுக்கு ப. பி. நூலில் காட்டப்பட்ட பர்தா விதிகள் ஒன்றும் பொருந்தவில்லையே! இங்கிலையில் குர்ஆன் பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளுவதா, அல்லது அதற்குப் பொருந்தாததும், கொடூரமானதும், ஹிந்து—கறிஸ்துவக் கொடுமைகளையும் விழுங்கக் கூடியதும், பகுத்தறிவுக்கும், இயற்கைக்கும் முற்றிலும் முரண்பட்டவையும், வெட்கப்படக் கூடியதுமான (ரசூல்-ஸஹாபாக்கள்-இமாம்-மௌலவிகள்-கவிகள் பெயரால் கூறப்படும்) ராக்ஷஸ விதிகளை ஏற்றுக் கொள்ளுவதா?"

என்று கேளுங்கள். இதற்குப் பிறகும் தக்க பதிலளிக்காமல் அவர்கள் உங்களைத் துன்புறுத்தினால், எதிர்த்து நின்று போராடுங்கள்; எங்களுக்கும் செய்தி அனுப்புங்கள்; ஒரு கட்சியாக நின்று போராடி பெண்களின் அடிமைத் தளையைக் களைய அவரவர் சக்தி வசதிக்கேற்ற முறையில் முயற்சி செய்யலாம். நிற்க.]

## பெண்கள் வீடடங்கி இருக்கவேண்டிய நிர்பந்தமில்லை.

குர்ஆன் 33 : 33 ல் கூறப்பட்ட

"மாதர்களே! நீங்கள் இல்லங்களில் தனித்திருங்கள்"

என்ற கட்டளையில் பெண்கள் தங்கள் வனப்பு-இயற்கை அழகை அலங்கரித்துக் கொண்டிருக்கையில் அது பரபுருஷர்களின் காமத்தைக் கிளர ஹேதுவாக இராதபடி தங்கள் தங்கள் இல்லங்களில் தங்கள் கணவர்களுடன் உல்லாசமாகத தனித்திருக்கும்படி யோசனை கூறப்பட்டிருக்கின்றது, என்றும், இதனால் பெண்கள் வெளியே செல்லக்கூடாது என்று ஏற்படவில்லை யென்றும் ஆரம்பத்திலேயே கண்டீர்கள். இந்த

---

செய்யவேண்டும்' என்பதற்கு 1947 ல் வெளியிடப்பட்டுள்ள 'முஸ்லிம் பெண்கள் விபச்சார தோஷமுள்ள அடிமைகள்தானா? என்ற இ. இ. வெ. 22 ஐப் பார்க்கவும். (இ. இ. ப.)

வியாக்கியானம் தான் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும், அதாவது இயற்கைக்கும், எல்லோருக்கும், எக்காலத்துக்கும் ஏற்றதாக இருக்கின்றது. இதற்கு ஆதாரவாகப் பல குர்ஆன் பிரமாணங்களைப் பின் காண்பீர்கள்.

இந்த வியாக்யானம் தான் சரியானது என்பதை பர்தா பிரமாண நூலிலிருந்தே ஆதாரத்தை எடுத்துக்காண்பிக்கின்றேன்.

"பெண்கள் தங்கள் அவசியக் காரியத்தை முன்னிட்டு வெளி வருவதாயின் சௌந்தர்யமும் சிங்காரமு மில்லாத முறையில் வெளி வரட்டும்".

என்று பர்தா பிரமாண நூல், பக்கம் 38 ல் 4 வது பாராவாக "—" என்ற குறிப்புக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் திருடனுக்குத் தேள் கொட்டியது போல் இருக்கின்றது இந்த வியாக்யானம்.

ஏனெனின், இதைப்பற்றி பர்தா பிரமாண நூலாசிரியர் முன்னும் பின்னும் ஒன்றும் கூறவில்லை. காரணம்? பர்தா பிரமாணத்தில் பெண்கள் வைத்ய சிகிச்சை முதலான 6 தடுக்கமுடியாத காரணங்களுக்காக நிர்பந்த அவசியத்தின் பேரில்,

1 இருள் சூழ்ந்த,
2 ராக்காலத்தில்,
3 அழுக்காடை அணிந்து,
4 கிழவிகள் கோலம் பூண்டு,
5 மேலே துப்பட்டி போர்த்தி,
6 முகமூடி அணிந்து,
7 ஒரு கண் பார்வையாக,
8 தன் குரலைக் காட்டாமல்,
9 பிறர் அடையாளந் தெரிந்துகொள்ளக் கூடாத விதமாய்,
10 ஒரு ரூபம் போல்,
11 வீதிகளில் பாவலாகப் போகாமல்,
12 சுவற்றில் தங்கள் புடவைகள் ஒட்டிக்கொள்ளும் விதமாய்;

த்தான் வெளிக் கிளம்பலாம் என்று பர்தா-கோஷா பிரமாணங்களுக்கு அர்த்தம் கற்பித்து (மேற்கண்டவாறு) விதிகளை நிர்ணயித்து விட்டதால், இவையனைத்தையும், இந்த

"பெண்கள் தங்கள் அவசியக் காரியத்தை முன்னிட்டு வெளி வருவதாயின் சௌந்தரியமும், சிங்காரமு மில்லாத முறையில் வெளி வரட்டும்"

என்ற பகுத்தறிவே உருவாகத் தோன்றிய இறுதிநபியவர்

களின் வியாக்யானம் தவிடு பொடியாக்கி விடுகின்ற காரணத் தால் தான், மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிப், பர்தா பிரமாண நூல் ஆசிரியர், ஒன்றும் விவரிக்காமலும், அது ஹதீஸா, தவீலா, இன்னொன்று, எந்த கிரந்தத்திலுள்ளது என்று கூட சொல்லத் துணியாமல், நாணயக் குறைவாய், மொட்டையாகக் குறித்துவிட்டு திருப்தி கொண்டிருக்கின்றார். ப. பி. பக்கம் 38 பார்க்கவும், உண்மையையுணர.

இப்படியேத்தான் ஏறக்குறைய எல்லா சுயநல ஆலிம்களின் குணமாக இருக்கக் காண்கின்றேன். ஆகையால்தான் இவர்களை முல்லாக் கூட்டத்தில் சேர்த்து இவர்களின் கயமைத் தனத்தை அம்பலப்படுத்தி இகழவேண்டி யிருக்கின்றது. (என்னுள்ளிருந்து கொண்டு ஷைத்தானோ வேறு என்னவோ இன்னமும் கடினமான வார்த்தைகளைக்கொண்டு இவர்களின் யோக்யதைப்பற்றி வர்ணிக்கும்படி தூண்டுகின்றது. மற்றொன்று, போதும்! மேற்கொண்டு விஷயத்துக்குப் போ! என்று கட்டளை இடுகின்றது. பின்னதற்கு இணங்கி மேற்கொண்டு போகின்றேன்.)

[33 : 59 க்கும், இதர கோஷா சம்பந்தமான குர்ஆன் பிரமாணங்களுக்கும் இந்த ஹதீஸே சந்தேகத்துக்கும் விளக்கத்துக்கும் அவசியமற்ற முறையில் அமைந்திருக்கின்றது. சோதரிகளே! நீங்கள் பாக்கியஸாலிகள். இதுபோன்ற உபதேசமும், இஸ்லாத்தில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமையைப் போன்றதும் வேறு எங்கும் நீங்கள் கிடைக்கப் பெற்றில்லை. இந்நூலின் ஆரம்பத்தில் உங்களுக்கு என்று அல்லா-ரசூலின் பெயரால் நம் முல்லா வர்க்கத்தினரால் விவரிக்கப்பட்ட விதிகளைக் கண்டு கலங்கிப் போய், உங்கள் அல்லாஹ்வை நீங்கள் நிந்தித்திருந்தால் ஆச்சர்யமில்லை. அல்லா பறந்த மனத்துடையவன்; தன் சிருஷ்டிகளின் பலஹீனத்தை உணர்ந்தவன்; ஆகையால் நிந்தித்து விட்டதற்காகக் கவலைப்படாதீர்கள்; இப்பொழுது 'எல்லாப் புகழும் அல்லாவுக்கே' என்று போற்றுகின்றீர்களல்லவா? இன்னமும் போகப் போக, அவன், அல்லாஹ், உங்களுக்காகப் பிரத்தியேகமான சலுகைகளையும் உரிமைகளையும் கொடுத்திருப்பதை உணர்ந்து, அவனைப் புகழ்ந்தவண்ணமாயிருக்கப் போகின்றீர்கள்.]

ஆனால், பர்தா பிரமாண நூலாசிரியர் இந்த ஹதீஸை, அதாவது இ. க. ன் குர்ஆன் வியாக்யானத்தை நிராகரிக்கின்றார். எப்படி யென்று பாருங்கள்! இந்த ஹதீஸைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமலேயே,

"ஆண்டவனுடைய கட்டளையாகிய தொழுகையை மஸ்ஜி

துக்கு வந்து நிறைவேற்றுவது உத்தமமல்ல வென்று (ரசூலவர்கள்) போதித்திருக்கையில் ஷைத்தான்களின் உறைவிடமாகிய கடைவீதிகட்கும் கூட்டங்கட்கும் பெண் மணிகள் செல்வது எத்துணை தூரம் கண்டித்து விலக்க வேண்டிய காரிய மென்பதை விவரிக்க வேண்டியதில்லை" என்று எழுதி உண்மையும் சரியுமான மேற்படி கோஷா-பர் தாவுக்கான ரசூலின் வியாக்யானத்தை நிராகரித்து, தன் சொந்த முடிவைக் கூறுகின்றார், இருண்ட இருட்டில் தான் வெளியே புறப்பட வேண்டு மென்ற கற்பனைக் கதைகளுக்கு ஆதாரவாக!. (என்னே இவரின் துணிச்சல்!! இறைவா! இவரை மன்னித்து விடுவாயாக; இவர் உன்னைப்பற்றி தப் பாக உணர்ந்திருக்கின்றார், கிரந்தங்களை வீணே சுமந்தவ ராக இருக்கின்றார்.)

## முகத்தை மறைக்கவேண்டியதில்லை.

"புகஹாக்கள் பெண்களின் மறைக்கவேண்டிய அங்கத் தைப்பற்றி எழுதுங்கால், **முகம் மறைக்கவேண்டிய அங்கம ல்ல வென்று"** கூறியிருக்கின்றார்கள். இது என் கற்பனையல்ல. பர்தா பிரமாண நூல் பக்கம் 40-41 ல் இப்படி எழுதப்பட் டிருக்கின்றது.

இதில் உட்கருத்து ஏதும் இருக்கமுடியுமா? இது தெளிவாக இல்லையா?

ஆனால், ஒரு பொய்க்கு ஒன்பது சொல்லவும், ஒரு புர ட்டை மறைக்க ஒன்பது புரட்டுகளைச் செய்யவும் வேண்டிய அவசியத்தைஒட்டி, பெண்கள் வீடடங்கிக் கிடக்கவேண்டிய மனிதப் பிராணிகள், அவர்கள் வெளிக் கிளம்பினால் முக மூடி—துப்பட்டி போன்ற கூடிவாளத்துடன் தான் கிளம்ப வேண்டும் என்று இவர்கள் ஆரம்பத்தில் குர்ஆனுக்கு செய்துவிட்ட வியாக்யானத்துக்கு ஆதரவாக மௌலவி சா ஹிபுக்கு இதில் உட் கருத்து ஒன்றை கற்பிக்கவேண்டிய அ வசியம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் அவர் இந்தத் தெ ளிவான தீர்ப்புக்கு உட்கருத்தைக் கற்பிக்கின்றார். அதாவது,

"—முகம் மறைக்கவேண்டிய அங்கமல்ல வென்று கூறி யதன் உட்கருத்து — தொழுகையின் நேரத்தில் அம் முகத்தை மறைக்க வேண்டியது கடமையல்ல வென்ப தாகும்" என்று

இந்த உட்கருத்துக்கு குர்ஆன் ஆதாரம் ஒன்றும் காட் டப்படவில்லை.

"பெண்கள் வெளிக்காட்டற் கூடுமான சவுந்தரியங்களை த்தவிர்த்து மற்றவற்றின் சௌந்தரியத்தை வெளிப்படுத் தக் கூடாது"

என்னும் 24 : 31 குர்ஆன் ஆயத்துக்குத்தான் புகஹாக்கள் "முகம் மறைக்கவேண்டிய அங்கமல்ல" என்று தெள்ளந் தெளிவாக வியாக்யானம் செய்திருக்கையில், அதற்கு உட்கருத்து கற்பிக்க மேற்படி ஆயத்திலோ, குர்ஆனில் வேறு எங்கு தேடினாலும் கிடைக்கவில்லை. 'முகமூடி அவசியமில்லை' என்பதை ஊர்ஜிதப்படுத்த குர்ஆனில் கட்டளை உள்ளதைப் பின்னர் பார்ப்பீர்கள்.

மேலே கண்ட 24 : 31 ஆயத்தில் மறைக்கவேண்டாத, 'வெளி காட்டற் கூடுமான சவுந்திரியங்கள்' என்ன வென்பதைக் குறிக்கையில், பல வியாக்யானிகள் முகத்தைச் சேர்த்திருக்கின்றார்கள்.

"வெளிக்காட்டல் கூடுமான உருப்புகளானது, முகம் இரு உள்ளங்கை ஆகியவைகளாகும். நிச்சயமாக இவை மறைக்கவேண்டிய அங்கமாகா" (ப. பி. P. 41)

என்று தப்ஸீரெ பைலாவீயின் கிரந்த கர்த்தா கூட சந்தேகமற எழுதியிருக்கின்றார். ஆனால், "மேலும் இந்தக் கட்டளை தொழுகைக்கு மட்டுமாகும். பிறாது பார்வைக்கன்று. ஏனெனின் சரீர மனைத்தும் மறைக்கவேண்டிய அவ்ராத்தாகும் — —" என்று கூறுகின்றார் இந்த வியாக்யானத்துக்குக் கொஞ்சமும் இடமில்லை யென்று முன்னரே கண்டிருக்கின்றீர்கள். 'சரீரமனைத்தும் மறைக்கவேண்டியது' என்று எங்குமில்லை. ஆனால், அனைத்தும் மறைக்கவேண்டியதில்லை, மறைக்கவேண்டாத பாகம் முகம் - கைகள் என்று இந்த கிரந்த கர்த்தாவே 24 : 31 க்கு நிச்சயமாகக் கூறுகையில், வேறு எந்த ஆயத்தில் 'சரீரமனைத்தும் மறைக்கவேண்டியது' என்று கூறியிருக்கின்றதோ, அதைக்காட்டவில்லை. காட்ட இடமிருந்தாலல்லவோ, காட்டியிருப்பார்! குர்ஆனுக்குப் பொருந்தாத வியாக்யானம்தான் ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை என்று முன்னரே கண்டிருக்கின்றோம். ஆகையால் எந்த மௌலவி சாஹிபின் சொந்தக் கைச் சரக்கானாலும் அவை குரானுக்கும், அறிவுக்கும் பொருந்தாதிருப்பதால் ஒதுக்கிவிட்டு மேலே செல்லுவோமாக.

மேலும், புகஹாக்களுடைய வியாக்யானப்படியும் பெண்களின் முகமும் கரங்களும் திறந்துகொண்டிருக்க வேண்டிய அங்கங்களென்று ஏற்பட்டதாலேயே, பெண்கள் 'தெருக்களிலும் கடைவீதிகளிலும் யதேச்சையாய் அலைந்து திரியலாமென்றும், அன்னிய ஆடவர்களுடைய இச்சைகளை தங்கள் மீது சாரும்படி செய்யலாமென்றும் (எந்த மடையனும்) தப்பர்த்தம் செய்துகொள்ளக் கூடாது" செய்து கொள்ளமாட்டான். ஏனென்றால், குர்ஆன் 33 : 59 ல் இறைவன்,

"—முன்னுண்டான அவிவேக (ஜாஹிலிய்யத்) (காலத்தின ரைப் போல் அழகு சவுந்தர்யங்களை வெளிக்குக் காட்டிக் கொண்டு அலையவேண்டாம்"

என்று எச்சரித்திருப்பதால்.

ஆனால், பர்தா பிரமாண நூலாசிரியரோ துணிச்சலாக "பெண்கள் தங்கள் முந்தானைகளால் முகத்தை மறைத்துக்கொள்வார்களாக"

என்று வந்துள்ள வேத வாக்கியத்தினின்று பகிரங்கமாக தடுக்கப்பட்டிருக்கின்றது" என்று ப. பி. ப. 42ல் எழுதுகின்றார். இதுவரை, எந்த வேத வாக்கியத்தில் (குர்ஆனில்) 'பெண்கள் தங்கள் முந்தானைகளால் முகத்தை மறைத்துக் கொள்வார்களாக' என்று வந்திருக்கின்றது என்று காட்டவே இல்லை. வியாக்யானத்தை யெல்லாம் வேத வாக்கியம் என்பதானால் குர்ஆன் எப்பொழுதோ ஹிந்து - கிறிஸ்தவ மத வேதங்களைப்போல் மறைந்து போயிருக்கும்; மௌலவி அஹ்மத் ஸயீத் போன்றவர்கள் நமக்கு ஆளுக்கோர் தேவர்களாகவோ, கடவுள்களாகவோ மாறி, நாம் அவர்களை நம் குல தெய்வங்களாக வணங்கிக்கொண்டு வந்திருப்போம். இப்படி நேரிடாதபடி எல்லாம் வல்ல நம் இறைவன் குர்ஆனில் ஒருகால்புள்ளி அளவும் கூட்டல் குறைதலுக்ிடங் கொடாமல்காத்து வருகின்றான். இல்லையானால் மௌலவி சாஹிப் குர்ஆனிலேயே 'பெண்கள் தங்கள் முந்தானைகளால் முகத்தை மறைத்துக் கொள்வார்களாக' என்பதையும், ஆலிம்களெல்லாம் அல்லாவுக்கு சமானமானவர்கள்' என்றும் புகுத்தி யிருப்பார்கள், பைபிளில் வேண்டாததை நீக்கி, வேண்டியதை அவ்வப்பொழுது சேர்த்து வருவதுபோல் கடவுளே குர்ஆனைப் பாதுகாப்பதாக நமக்கு வாக்குறுதி கொடுத்து, அதன் பரிசுத்தத் தன்மையைக் காத்து வருவதினால் தான் நாம் இவ்வாலிம்களின் கைச்சரக்குகளுக்காக பயப்பட வேண்டியதில்லை. ஆனால் மக்களை அவர்கள் பாமரர்களாக, அல்லா-ரசூலின் பெயரால், இதுவரை வளர்த்துக் கொண்டுவர நேரிட்டது, முடிந்தது. இந்நிலைமை நீடித்திருக்காது, மாறி வருகின்றது. எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாதல்லவா?

பிறருக்கு காட்சியளிப்பதற்காக அலங்கரித்துக்கொண்டு வெளிப்புறப்படுவதைத் தடுப்பதே பர்தா பிரமணங்களின் நோக்கம் என்பதற்கு இன்னமும் பர்தா பிரமாண நூலிலேயே ஆதாரங்காண்பீர்கள்.

"ஸ்திரீகள் அலங்கரித்துக் கொண்டு வெளிப் புறப்பட ஆடவர் அனுமதி கொடுப்பதும், அன்னிய ஆடவர் மத்தி

யில் ஸ்திரீகள் அலங்காரத்துடன் செல்வதும் உரோஷமின்மையே'

என 'தப்ஸீர்ரூஹுல்மஆனி'யில் வருகின்றது' என்று ப. பி. பக்கம் 3 ல் காண்பீர்கள்.

இந்த வியாக்யானம் ரசூலவர்களின்

"பெண்கள் சௌந்தரியமும் சிங்காரமுமில்லாத முறையில் வெளி வரட்டும்"

என்ற வியாக்யானத்தைக் கொள்ளுவதா? இதற்கு நேர்மாறானதும், அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும், புறம்பானதும், வெட்கக்கேடானதும், பெண்களை அடிமைகளாக்கிக் கொடுமைப் படுத்தும்படியானதுமான 'ப. பி' வியாக்யானங்களை எடுத்துக்கொள்ளுவதா என்பதை நீங்களே சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வருவீர்களாக.

இன்னமும் பாருங்கள். ப. பி. பக்கம் 15 ல், "(என் சகோதரி) அஸ்மாபி அபின்து அபீ பக்கர் (ரலி) ஒரு நாள் ரசூல் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்தில் பிரவேசித்தார். அவர் மேல் மெல்லிய ஆடை இருந்தது. அதைக் கண்டு நாயகம் (ஸல்) அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்" என ஆயிஷா (ரலி) அவர்கள் மொழிந்ததாய் அபூதாவூதுபை ஹகி இப்னு மாஜா இவர்கள் ரிவாயத் செய்கின்றார்கள்" என்று கண்டிருக்கின்றது.

இதில் இருந்து 2 விஷயங்கள் விளங்குகின்றன.

1 பெண்கள் வெளியில் செல்ல அனுமதியிருந்தது.

2 உடல் வனப்பு தெரியும்படி ஆடை அணிவது தான் தடுக்கப்பட்டிருந்தது, என்று.

பெண்கள் வெளிக்கிளம்புவதே தடுக்கப்பட்டிருந்தால், நாயகமவர்கள், "ஏ மடமாதே! அல்லாவின் உத்திரவை மீறி வெளிப்பட்டாய், ஏன்? அதுவும் மெல்லிய ஆடையுடன் வெளிப்பட்டாய்! போ, திரும்பிப் போய் வீடடங்கித் தனித்து உறைந்து கிட" வென்றல்லவோ தீர்ப்பு கூறியிருப்பார்கள். ஆனால் குர்ஆனின் சரியான வியாக்யானிரசூலேயாகையால், குர்ஆன் 24 : 30 ல்

"மூமினான ஆடவர் தங்கள் பார்வைகளைத்தாழ்த்தும் படி — —"

எச்சரிக்கப்பட்டதை ஒட்டித் தன் பார்வை அந்த மடமாதின் பேரில் படாதபடி, தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு தன் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

முகத்தை மட்டும் திருப்பிக்கொண்டதோடு நாயகம் திருப்பி கொண்டுவிடாமல், அல்லாவின் கட்டளையை அங்கேயே விளக்கிக் காட்டியுள்ளார்கள், இப்பகுதியை இங்கே

எடுத்துக்காட்ட ப. பி. ஆசிரியர் துணியவில்லை. தெரிவித்தால் தன் கட்சிக்குப் பலம் குறையும் என்பதை உணர்ந்தே இப்படி நாணயக் குறைவாய் நடந்துகொண்டிருக்கின்றார். இறைவன் 'மாலிக்கி யௌமித்தீன்' (=நியாயத் தீர்ப்பு நாளில் எஜமானன்) என்பதை மறந்தவர்கள் தான் இப்படி நடந்துகொள்ளுகின்றனர். நிற்க.

இறுதி நபியவர்கள் அஸ்மாவை விளித்து

"ஓ அஸ்மா! பெண்கள் பருவமடைந்த பிறகு தன் உடல் தெரியும்படி உடுப்பது சரியல்ல. இதுவும் இதுவும் தவிர்த்து"

என்று எச்சரித்து,

'இதுவும் இதுவும் தவிர்த்து' என்று சொல்லும் பொழுது தன் முகத்தையும் கைகளையும் குறித்துக் காட்டினார்கள்'

என்ற பகுதிதான் ப. பி. ஆசிரியரால் குறிக்காமல் விடப்பட்டிருக்கின்றது. இது அதே அபூதாவூதின் கிரந்தம் 31 : 30 ல் காணலாம்.

ஆனால் ப. பி. ஆசிரியர் இப்பகுதியை விட்டு விடவில்லை. ப. பி. பக்கம் 65 ல் ஊர் பெயர் காட்டாமல் இப்பகுதியை

"ஏ அஸ்மாவே! பெண்கள் வயதெட்டியவுடன் அவர்களின் சரீரத்தில் கண்கள், உள்ளங்கை, உள்ளங்கால் இவைகளைத் தவிர்த்து எந்த பாகமும் தெரியும்படி உடையுடுத்துவது கூடாது"

என்று திரித்து—கூட்டி—குறைத்து தன் கட்சிக்குப் பலம் தேடியிருக்கின்றார். அந்தோ! இம்மனப்பான்மையை என்னென்பது!!

வாசக நேயர்களே! உங்கள் முடிவுக்கே விட்டு விடுகின்றேன். இன்னமும் இதுபோன்ற துணிச்சலான நாணயக் குறைவைப் போகப் போகப் பார்ப்பீர்கள்.

எது எதுவானாலும், 'நஞ்சோதரிகள் வீடடங்கிக் கிடக்க வேண்டியதில்லை; வெளியில் செல்ல உரிமையுண்டு தாராளமாக; வெளியில் செல்லுங்கால் முகத்தை மூடவேண்டிய கட்டாயமில்லை' என்பதை நிரூபிக்க குர்ஆனுக்குப் பொருத்தமான

"பெண்கள் தங்கள் அவசிய காரியத்தை முன்னிட்டு வெளி வருவதாயின் சௌந்தரியமும் சிங்காரமுமில்லாத முறையில் வெளி வரட்டும்"

"ஓ அஸ்மாவே! பெண்கள் வயதெட்டியவுடன் தங்கள் முகத்தையும் கைகளையும் தவிர்த்து வேறு எந்த பாகமும் தெரியும்படி உடை உடுத்துவது கூடாது"

என்ற இரு ஹதீஸ்களே போதுமானவையாயிருக்கின்றன. மேலும், இவ்விரு இறுதிகபியவர்களின் வியாக்யானங்களே மற்ற இதற்கு மாறான ஹதீஸ்கள் எனப்படும் கூற்றுகளையும், நம் முன்னோர்களின் தீர்ப்புகளையும், வியாக்யானங்களையும் பொருத்தமற்ற, அல்லது, பொய்யான, அல்லது சந்தேகத்திடமான கூற்றுகள் என்று தள்ளி வைத்துவிட போதுமான வைகளாயுள்ளன. எனவே, சுருங்கச் சொல்லின்,

'நம் பெண்கள், (குர்ஆன் 33 : 33ல் கண்டபடி) தங்கள் ரூபலாவண்யத்தையும், ஆடை யலங்காரத்தையும் இதரர் கண்டு காமக் கிளர்ச்சி பெறுகபடி, (33 : 59 பிரகாரம்,) ஒரு தலை மூடி, அல்லது துப்பட்டி, அல்லது பர்தா, அல்லது புர்கா என்பதைக்கொண்டு (24:31 ல் விலக்களிக்கப்பட்ட) முகம் கரங்கள் போன்ற அவசியமான உறுப்புகளைத்தவிர்த்து, இதர தங்கள் மர்மஸ்தானங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், பிரத்தியேகமாக மார்பின் எடுப்புகள் ஆண்களின் கண்களைக் கவராதபடி மறைந்திருக்கும் வகையில் போர்த்திக்கொண்டு, கண்ணோடு கண்ணோக்கினால் தான் களங்கமேற்படுமாகையால், கண் பார்வையை கீழ்நோக்கிக் கொண்டு, கால்களிலுள்ள ஆபரணங்களின் சப்தம் வெளிப்படுவதால் பிறர் மனது கவரப்படுமாகையால், அப்படி சப்தம் வெளியாகும்படி பாதங்களைத் தட்டி நடக்காமல் வாழ்க்கைக் அவசியமான அனைத்துக்கும் வெளிக்கிளம்பலாம் என்பதில் எவ்வித தடையும் கிடையாது. முகமூடி அவசியமில்லை; கட்டாயப்படுத்தப்பட்டில்லை'

என்ற என் வியாக்கியானத்தை அலசிப் பார்த்து முடிவுக்கு வருவீர்களாக. நிற்க

முகமூடி கட்டாயப்படுத்தப்படவில்லை; மேலும், அது பழக்கத்திலிருந்தாலும் அது சில சமயங்களில் கூடாது என்று கூட தடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மறுபடியும் அழுத்தந் திருத்தமாக சொல்லுகின்றேன், அது அவசியம் என்ற நம்பிக்கையில் ஊறிப்போனவர்களின் மனதில் பதியட்டுமென்று.

முகமூடி அவசியம் என்பவர்களின் காரணக் குறைவை இன்னமும் விளக்கவேண்டியிருக்கின்றது.

ப. பி. பக்கம் 12 ல்,

''நபியே! நீர் உமது மனைவிகளுக்கும் புத்திரிகளுக்கும், ஏனைய மூமின்களான பெண்களுக்கும் தங்கள் மேல் — துப்பட்டி போர்த்திக்கொண்டு வெளிப்படும்படி சொல்வீராக''
(குர்ஆன் 33 : 59) (ப. பி. ப. 34 & 12)

என்ற பிரமாணத்தில் வரும் மேல்துப்பட்டி, கொண்டு எதெதை மறைக்கவேண்டாம் என்பதற்கு குர்ஆன் 24 : 31 ல் விளக்கப்பட்டிருக்கின்றது.

இந்த முக்கியமான பகுதியைமட்டும் ப. பி. நூலாசிரியர் மறந்தும் கூட எழுதவில்லை.

இதன் காரணத்தைப்பற்றி முன்னரே விளங்கிக்கொண்டிருக்கின்றீர்கள். ஆரம்பத்தில் விளக்கப்பட்ட 6 நிர்பந்த காரணங்களுக்கின்றி பெண்கள் இருளில்லாத இரவிலும் வெளிக்கிளம்பக் கூடாது என்றும், இருளடைந்த இரவில் மட்டும், ஒரு உருவம் போல், அடையாளந் தெரிந்து கொள்ள முடியாதபடி புறப்பட்டாலும், முகமுள்பட சர்வாங்கமும் தெரியாதபடி போர்த்திக்கொண்டு தான் போகவேண்டுமென்றும் பிரச்சாரம் செய்யும் மௌலவி சாஹிப் குர்ஆன் 24:31 ல் உள்ள உண்மையைச் சொல்லத் துணியவில்லை.

இதில் 'பெண்கள் எப்பொழுது வெளிச் சென்றாலும் முகம் மூடப்படவேண்டியதில்லை, திறந்திருக்கலாம்' என்ற கருத்தடங்கி இருப்பதனால் தான், அதை விழுங்கி விட்டிருக்கின்றார்.

24 : 31 ல் எதை எதை மூடவேண்டுமென்பதை விளக்குகையில், (1) மர்மஸ்தானங்கள் & (2) மார்பு இவ்விரண்டையும் ஸ்பஷ்டமாக சொல்லிவிட்டு, அவசியமான உருப்புகளைத் தவிர்த்து 'ஸ்ஜீனத்'= இயற்கை செயற்கை அழகைக் காட்டும் வேறு உருப்புகளையும், பிறர் மனதைக் கவரும் ஆடை ஆபரணங்களையும் மறைத்துக்கொள்ளும்படிப் பொதுவாகச் சொல்லியிருக்கின்றான் இறைவன்.

மறைக்க வேண்டாத உருப்புகள் இன்னின்னவை யென்று குர்ஆன் ஸ்பஷ்டமாக சொல்லவில்லை. இந்த விஷயத்தில் ஆங்காங்கே யுள்ள பழக்க வழக்கங்களை ஒட்டி நிர்ணயித்துக்கொள்ள முஸ்லிம் சமூகத்துக்கு குர்ஆன் உரிமை கொடுத்து விட்டிருக்கின்றது. இதற்காகவே, 'அவசியமான உருப்புகளைத் தவிர்த்து' என்று கூறப்பட்டிருக்கின்றது.

## அழகு எங்கே இருக்கின்றது?

ஆனால், மறைக்கவேண்டாதவை முகம்—கரங்கள் முதலியன என்று பலதடவை முன்னரே குர்ஆன் பிரமாணங்களின் ஆதி வியாக்யானியாகிய இறுதி நபியவர்களே தங்கள் சொல் செயல்களால் காட்டிச் சென்றிருப்பதைக் கண்டீர்கள், என்றாலும்,

'இயற்கையழகென்பது முகமே. அது அழகுக்கு மூலஸ்தானமாய் இருக்கின்றது'

என்று தப்லீக் பத்ஹுல் பயானில் இருப்பதை ப. பி. ப. 15 ல் எடுத்துக்காட்டப்படுகின்றது. குர்ஆனில் எங்கும் 'இயற்

கை அழகுக்கு முகமே மூலஸ்தானமாயிருக்கின்றது' என்று
கூறப்பட்டில்லை. அப்படியானால் மார்பை மறைக்கும்படி ப்ர
த்தியேகமாக எச்சரிக்க குர்ஆன் முகத்தையும் சேர்த்துக்
கூறவில்லையே! கூறியிருக்கவேண்டுமல்லவா? இறைவனு
க்கில்லா அறிவா நமக்கு? இயற்கை அழகு எங்குதான்
இருக்கின்றது என்றுகூட குர்ஆனில் எங்கும் கூறப்பட்ட
தாக இல்லை. இந்நிலையில் அவரவர்களிஷ்டப்படி அதாவது
மனப் பக்குவப்படி ஒரு பெண்ணிடம் இயற்கை அழகைக்
காணலாம். புட்டத்தில் அழகடங்கியிருப்பதாக
சொல்லும் ஆராய்ச்சியாளரும் உண்டு. நிறம்-நடை-உடை
பாவனைகளை கண்டு பரவசப் படுபவர்களுமுண்டு.
கண்ணில் அழகைக் காண்பர் சிலர். புருவத்தில் என்பர்
சிலர், உதடுகளில் என்பர் சிலர்; சிவர் புன்முறுவலில்
காண்பர் அழகை. எடுப்பான மார்பில் காண்கின்றனர் பலர்.
இப்படிப் பலர் பலவிதமாக பெண்ணிடம் அழகைக் காண்கி
ன்றனர். என்னைப் பொருத்தவரையிலும் எங்கே காண்கின்
றேன் என்று கிண்டல்கார வாசக நேயர்கள் கேட்பார்கள்.
'எனக்குத் தெரியாது', 'திட்டமாய் சொல்லமுடியாது' என்
று சொன்னால் ஒப்பமாட்டார்கள். ஆகையால் முகத்தில்,
முக்கியமாகக் கண் பார்வையின் ஒளியில் நான் மனதைக்
கவரும் தன்மை யிருப்பதாக நினைப்பதுண்டு. முகத்தின் கீழ
மைந்துள்ள மார்பு எடுப்பிலும் இருப்பதாக ஏனையோர் வற்
புறுத்திக் கூறுகையில் நான் மறுப்பதல்லை. காமத்தைக் கிள
ர்வது மார்பின் எடுப்பும், கடைக்கண்பார்வையும் என்று நான்
நினைப்பதுண்டு. காதலை வளர்ப்பது களங்கமற்ற பார்வை
என்று நினைக்கின்றேன்.

ஆனால், பெரும்பாலார் மார்பின் எடுப்பில் தான் காமத்
தைக்கிளரும் அழகைக் காணக் கேட்டிருக்கின்றேன். ஸினி
மா-டிராமா பார்க்கக் கூடாது என்னும் முஸ்லிம்களுக்கு
இந்த உண்மை தெரிந்திராது. நான் குற்றங் குறை காணும்
(critic) நோக்குடன் வசதி உள்ள பொழுதெல்லாம் ஸினிமா
முதலிய காட்சிகளைப் பார்க்கத் தவறுவதில்லை.
இலவசமாகவானால், (நித்திரை அதிகமாகக்கெடா
தானால்,) டிராமாவையும் விடுவதில்லை. அங்கு நான்
அதிகமாக கவனிப்பதெல்லாம் மக்களுடைய மனோபாவத்
தைத் தான். அறிவை வளர்த்துக் கொள்ளுவதிலேயே நான்
கண்ணுங் கருத்தா யிருப்பது வழக்கம். நான் கற்றுள்ளது-
அநுபவம் பெற்றுள்ளது அனைத்தும் என் உள்ளங்கையள
வும் இருக்காது என்ற நம்பிக்கையுடையவனாகையால், என்
அறிவு பயிர்ச்சிக்கும், உலக அநுபவம் பெறவும் அனைத்தி

லும் கலந்துகொள்ள இஷ்டமுள்ளவனுகவேத்தான் நான் இன்னமும், வயதாகிவிட்டபிறகும், இருந்து வருகின்றேன். இப்படி நான் ஸினிமா-டிராமா முதலிய காட்சிகளை கவனிக்கும்பொழுது, பெரும்பாலார் பெண்பாலாரின் மார்பெடுப்பில் தான் அழகையும் ஆனந்தத்தையும் காண்பதாகத் தெரிகின்றது. இந்த ரகசியத்தை உணர்ந்துதான் போலும் 'ஸ்தன யோக குமாரி'களாக உள்ளவர்களைப் பணம் பறிக்கும் படக்காரர்கள் தேடுகின்றூர்கள் போலிருக்கின்றது. கண்-மூக்கு வாய்-குரல் முதலியன திருப்தியானவையாக இல்லாவிட்டாலும், (Sex Appeal) காமத்தைக் கிளரும் மார்பெடுப்புடன் காட்சி யளிக்கும் நடிகைக்கு படத்தில் 'ஷபாஷ்' கிடைக்கின்றதைக் காணலம். இயற்கையான மார்பெடுப்பில்லாவிட்டாலும், அதை உருவாக்கிக் காட்டுவதில் டைரக்டர்கள் அதிகக் கஷ்டப்பட்டு வருவதாக கேலிக்கையுடன் உண்மையுணர்ந்தவர்கள் பேசிக்கொள்ளுகின்றூர்கள்.

சாதாரண மார்பெடுப்புடன் மக்கள் திருப்திகொள்ளவில்லை என்ற பகிரங்கரகஸியத்தை உணர்ந்துதான் போலும் திறந்த மார்புகளைக் காட்ட முயலுகின்றனர். இல்லையேல், தளர்ந்த மார்பையும் 'மேக்கப்' செய்து எடுத்துக்காட்டிக் காட்சியளிக்கின்றனர். 'டைட்' ஆன பாடிக்குள் உள்ள ஸ்தனங்களை, அதன் எடுப்பு தெரியும்படியான முறையில் அமைத்து, 'ஜம்பர்' தொடுப்பர். சேலையை உடுத்தினுலும், சேலையினுள்ளிருந்துகொண்டே ஸ்தனங்கள் மக்களின் கண்ணைக் கவரும்படியான முறையில் தான் சேலையின் 'டெக்ஸ்சர்' இருக்கும். இன்னமும் மானங்கெட்ட டைரெக்டர்கள் மானங்கெட்டவர்களின் மார்புகளை 'டால்'டிக்கும் கும்பங்களால் அலங்கரித்துக்காட்டுவர். சமீபத்தில் '— வள்ளி'யைப் பார்த்தவர்கள் என் கூற்று பிழைப்பட்டது என்று கூறத் துணியார்கள். இதில் இன்னேர் ரகமும் உண்டு. வெள்ளையர்களில் பெண் நடிகைகளின் மார்பும் அவர்களுடன் நடிக்கும் முறையில் லூஸாக விட்டுக் காட்சியளிப்பர்.

இவ்வளவு தூரம் மார்பைப்பற்றி நான் விவரிப்பதைக் கண்டு புழுக்கமுடைய வாசகர்கள் என் மேல் சேற்றை வாரி எரிவார்கள். விளக்கவேண்டிய அவசியமிருந்துதான் விவரிக்கின்றேன் என்பதை இதோ கீழே காண்பீர்கள். —

## மார்பை மறைத்து வை

குர்ஆன் 24 : 31 ல், ஆரம்பத்தில்,

"(முதலாவதாக) தங்கள் பார்வைகளைத் தாழ்த்தும்படி — சொல்வீராக"

என்று இறுதிநபியவர்களுக்கு குர்ஆன் ஆணையிட்டிருக்கின்றது.

இதில், கண்களைப்பற்றிச் சொல்லாமல் கண் பார்வைகளைப்பற்றி பிரஸ்தாபித்து, கண் பார்வைகளைத் தாழ்த்தும்படி, அதாவது கீழ்நோக்கிக் கொள்ளும்படி, அதாவது பார்வை விஷமங்கலந்ததாயில்லாதபடி இருக்கும்படி கட்டளையிட்டான், இறைவன். இதில் மேலே கண்ட உண்மை நிறைந்திருக்கின்றது. கண்ணோடு கண் கலந்தால் தானே காமம், கவர்ச்சி, கிளர்ச்சி, உணர்ச்சி, காதல், கூதல் அனைத்தும்! இது உலகம் ஒப்புக்கொண்ட உண்மை. காம உணர்ச்சியைத் தடுக்க நினைத்தால் கண் பார்வைகளைப் பரிமாறிக் கொள்ளக்கூடாதென்பதே இயற்கை சட்டம். இதுதான் முதலில் குர்ஆனால் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

பின்னர் 24 : 31 ல்,

“(இரண்டாவதாக) மர்மஸ்தானங்களைக் காத்துக்கொள்ளும்படி — சொல்வீராக”

என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது. மர்மஸ்தானங்கள், இதைப்பற்றி மர்மமாகவே சொல்லி அதைப் பாதுகாத்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால்தான் முதலில் கண் பார்வைக்கு முதல் எச்சரிப்பு. பின்னர்தான் இரண்டாவதாக மர்மஸ்தானத்துக்கு எச்சரிக்கை. நிர்வாண இயக்கத்தைப்பற்றிக் கொஞ்சமாவது தெரிந்துகொண்டவர்களுக்கு கண் பார்வையின் இரகசியமும், வலிமையும் தெரியும். அவர்கள் காம லீலைகளில் ஈடுபட்டு கற்பிழந்து மிருக வாழ்க்கை நடாத்துவதாகக் கூறுவதுண்டு. இது மிகைப்படுத்திக் கூறும் கூற்றாகும். நிர்வாண வாழ்க்கையில் கண்ணையும் மனதையும் அடக்க முடியாதா என்று பரிகசிக்கின்றனர். (இதிலிருந்து நான் நிர்வாண இயக்கத்தை ஆதரிப்பதாக நினைத்துவிடாதீர்கள்). நிர்வாண இயக்கத்தைப்பற்றி மேல் நாட்டிலிருக்கையில் நான் உணர்ந்தவரையில், நிர்வாணர்கள் காமக் கிளர்ச்சியற்று தூயமாகவும் வாழ்கின்றனர், வாழக்கூடும் என்பதே.

இயற்கையை ஒட்டிப் பின்னர் 24:31 ல்,

“(மூன்றாவதாக) வெளிக்காட்டற் கூடுமான சவுந்தரியங்களைத் தவிர்த்து மற்றவற்றின் சௌந்தரியத்தை வெளிப்படுத்தக் கூடாது -- என்று எச்சரிப்பீராக”

என்று வருகின்றது. இங்கே இயற்கை செயற்கை அழகைப் பற்றிப் பொதுவாகப் பிரஸ்தாபித்து, அதை காட்சியளிக்க வேண்டாம், அதாவது விளம்பரப்படுத்தவேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

என் தங்கள் ரூபலாவண்யத்தையும், அலங்கரிப்பையும் பிறர் கண்ணுக்குக் காட்சியளிக்கக் கூடாதென்பதைப் பற்றி அதிகம் விவரிக்கவேண்டியதில்லை. 1500 வருஷங்களுக்கு முன் குர்ஆன் இட்ட எச்சரிக்கை இன்றைக்கும், என்றென்றைக்கும் அவசியமாக இருக்கின்றதைப் பற்றிமட்டும் கொஞ்சம் விவரிப்பது அவசியமாகின்றது.

கொஞ்ச காலத்துக்கு முன் அலங்கரித்துக் கொண்டு வெளிவருபவர்கள் பொது மகளிரும், தேவரடியாள் என்னும் நடிகைகளுமேயாவர். பார்த்த மாத்திரத்தில் யார் யார் 'தேவடியாள்-விபச்சாரி–விவஸ்தை அற்றவள்' என்று சொல்லிவிட முடியும். குடும்பப் பெண்கள் அப்படி அலங்கரித்துக் கொண்டு வந்தாலும் கேலி செய்வதுண்டு; அவளை இகழ்ந்து 'தேவடியாப் போல' என்று பேசுவதுமுண்டு.

ஆனால், இன்று நாகரீகத்தின் பேரில், முன்னேற்றத்தின் பேரில், பெண் சமத்துவத்தின் பேரில், உயர்தரக் கல்வியென்பதின் பேரில், நடிகைகளைப் போலக் காட்சி அளிக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமாக இருக்கின்றது.

ஒய்யார பங்களாக்களில் போய் பாருங்கள். அவ்வீட்டுக்காரிகள் சாதாரண உடையுடன், ஆபரணங்கள் பல இன்றி, 'குடும்பப் பெண்'களே போல் காட்சி அளிப்பர். அதே வீட்டுப் பெண்ணை அன்று மாலையில் ஒரு 'டீப் பார்டி'யிலோ, பொதுப் பூங்காக்களிலோ, கடற்கரைகளிலோ, ஸினிமா முதலிய ஷோக்களிலோ அவள் காட்சியளித்தால் அடையாளங் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும். அந்த அளவுக்கு ஸினிமா நடிகை (கூத்தாடி)களைப் போல் அலங்கரித்துக் கொண்டு காட்சியளிப்பாள் தன் கணவன், சோதரனோடோ, தன்னந்தனியாகவோ, அந்தக் குடும்பப்பெண்!.

அவளை, அதைப்போன்ற குடும்பப் பெண்ணைக் கடைக்கண்ணாலாவது பார்க்க விரும்பாதவன் 'பாபி—பயித்தியக்காரன்'; பார்க்காதவன் இல்லையென்றால் மிகையாகாது. எனக்கு, அவளைப் பார்க்கக் கூடாது என்ற உத்திரவிருந்தும் அவள் கண்ணோடு என் கண் கலக்காத வகையிலாவது பார்க்கும்படி ஷைத்தான் தூண்டத்தான் செய்கின்றான். இந்த பலஹீனத்தை மீறி நடப்பது சிரமமாகத்தான் இருக்கின்றது. (என் பலஹீனத்தை நான் உணர்ந்திருக்கின்றேன். அதை ஒப்புக்கொள்ளுவதில் நான சகஜமாக வெட்கப்படுவதில்லை. இதன் பலனாக நான் என் பலஹீனத்தைக் களைந்து வருகின்றேன்.) நான் அவர்களின் மனோபாவத்தை கவனித்தறியும் நோக்குடன் கவனிப்பதுண்டு . அப்படி இரகசியமாக கவனித்தால், அவர்கள், அதுபோன்ற அலங்காரப் பிரியர்கள்,

தங்களை இதரர் கவனிக்கவில்லையா என்று கவனிப்பது விளங்கும். இதரர் தங்கள் அழகு, ஆடம்பரம், அலங்கரிப்புகளை கவனிக்கவேண்டுமென்ற முக்கிய நோக்குடனேதான் இப்படிக் காட்சியளிக்கின்றனர் என்பது தெள்ளென விளங்கும். கடற்கரைகளில் கும்பல் கும்பலாக ஆண் - பெண்பாலார் கலந்தும், தனித்தனியாகவும் உட்கார்ந்து காட்சியளிப்பதும், காட்சி காண்பதும் உண்டு. இந்தக் கும்பல்களில் படித்த வகுப்பினரும்; உயர்தர படிப்பிலீடுபட்டவர்களும், அவள், அவன் வனப்பைப்பற்றி பிரஸ்தாபிப்பதைக் கவனிக்கலாம். பார்வைகளைப் பரிமாறிக் கொள்வதையும் கவனிக்கலாம். -- விவரிக்க விரியும்.

இதில் ஒரு பரிதாபகரமான விஷயமென்ன வென்றால், ஒவ்வோர் தகப்பனும், புருஷனும், சோதரனும், தன் குமரி, மனைவி, சோதரிகளின் காட்சியளிக்கும் நடிகைகளைப் போன்ற அலங்கரிப்புகளை உள்ளூர வெறுக்கத்தான் செய்கின்றான். ஆனால், தடுப்பதற்கில்லையே யென்று நொந்து கொள்ளுகின்றான். இதில் இன்னோர் ரகமும் உண்டு. கால சக்கர ஓட்டத்தை அவனால் தடுக்க அவனிடம் குர்ஆனைப் போன்ற ஆயுதம் இல்லாததால் தன் கண்ணிலுள்ளத் தூணைக்கவனிக்கமாட்டான். இதரர் கண்களிலுள்ளத் துரும்பைத் தூணாக்கிக் காட்டுவான். தன் மனைவி-சோதரி-குமரி-தாயைப்பற்றி இதாரும் இழிவாகப் பேசுவார்களே என்ற சொரணையின்றிப் பிறரைப்பற்றிப் பிரஸ்தாபிப்பான். இது போன்ற விபரீதக் காட்சிகள் பலவற்றைக் காணலாம் நகரங்களில். இந்த விபரீதங்கள், குடும்பப் பெண்கள் நடிகர்களாகக் காட்சியளிக்கும் கோலா காலப் போக்குகள் முதலியன இப்பொழுது நவநாகரீகத்தின்பேரால் இன்று நடக்க, இறுதிநபியவர்கள் காலத்தில் 1500 வருஷங்களுக்கு முன்னர், 'ஜஹாலியத்' என்னும் அந்தகாரத்தின் பெயரால் நடந்தது. அக்கால அலங்கரிப்பு கரடுமுரடாக இருந்திருக்கும். இக்கால அலங்கரிப்பு நாஜூக்காவதாக இருக்கின்றது. இது தான் வித்தியாசம்.

ஆனால், ஒழுக்க உணர்ச்சி உள்ள ஒவ்வொருவரும் இக்காலப் போக்கை விரும்புவதே கிடையாது என்று முன்னரே குறிப்பிட்டிருக்கின்றேன்.[6] ஆனால் அவர்களால், கால ஓட்டத்தின் வேகத்தைத் தடுக்க முடியவில்லை. இந்த ஓட்டத்தில் அடிபட்டு ஓடுபவர்களில் முஸ்லிம்களும் உண்டென்பதை நவரீஸ்கான், பஜ்லுல்லா, நைநார், அமீருத்தீன் முதலிய பல குடும்பத்தினரைப்பற்றித் தெரிந்தவர்களுக்குத்

6 சுயேச்சை-சமத்துவம் இவைகளின் பெயரால்

தெரியும். இந்த ஓட்டம் நாகரீகமல்ல, நல்லதல்ல, நன்மைக் கல்லவென்பதை அனைவரும் உணருகின்றனர். ஆனால் தடுப்பதற்கில்லை. ஆனால், முஸ்லிம்களைத் தடுத்துவிட பிரஸ்தாபத்திலுள்ள 24 : 31 ல் கண்ட பிரமாணமும், 33 : 33 ல் "முந்திய மூடநாட்களில் நடந்துகொண்டதேபோல் உங்கள் வனப்பைக் காண்பித்துத் திரியாதீர்கள்" என்ற எச்சரிக்கையும் போதுமானவைகளாக இருக்கின்றன.

மேல் நாட்டில் இந்த குர்ஆன் விதிக்கு மாறாக ஆண் பெண் இருபாலாரும் கட்டுத்திட்டமின்றி தங்கள் வனப்புகளை மிகைப்படுத்திக் காட்டிக்கொண்டு கலந்து கொள்வதாலல்லவோ அங்கு 'கற்பு' என்பதற்கும், சமத்துவம் என்பதற்கும் விபரீத அர்த்தம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இது பற்றி பர்தாப்பிரமாணங்களைப் பரிசிலனை செய்த பிறகு மேற்கொண்டு விசாரிக்கப்படும். அடுத்தபடியாக, 24 : 31 ல்,

> "(நான்காவதாக) அவர்கள் தங்கள் தலை முடியை அவர்களின் மார்பின் மேல் விழுந்து மறைக்கும்படி சொல்வீராக"

என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரமாணத்தைத்தான் ப.பி. நூலாசிரியர் கடைசிவரை தன் நூலில் பிரஸ்தாபிக்கவேயில்லை. ஏன்? அவர்கள்,

> "பெண்ணின் தலைக்கூந்தல் தொடுத்து பாதத்தின் நகம் வரைக்கும் யாவும் மறைக்கவேண்டியதே"

என்னும் கட்சியினர்.

---

தான்தோன்றித் தனத்தை வளர்த்துவிட்ட நம்நாட்டு நாஸ்திகப்பெரியார், ஈ.வெ. ராமஸ்வாமி நாயக்கர் கூட, அநுபவத்தின் பலனாக நவநாகரீகத்தைக் கண்டிக்க ஆரம்பித்துள்ளார். அவருடைய இளம் மனைவி ஒரு 'விதவை' போல் காட்சியளிக்கின்றார். அவருக்கு, மணியம்மையார் மனைவியாகும் முன் அவ்வம்மையார் அவருடனே, வேறு பேச்சாளிகளுடனே பேச்சு மேடைகளை அலங்கரிப்பதுண்டு. மனைவி ஆனபிறகு 'கோஷா', அதாவது ஆண்களிடமிருந்து ஒதுங்கியே இருக்கின்றார், சமீபத்தில், பூஜாரிப்பட்டியில், 12-3-52 ல் பார்க்கையில் அவ்வம்மையார் குர்ஆன் கோரும் கோஷா முறையை அனுஷ்டிப்பவரே போல் தோற்றமளித்தார். தன் கணவரின் நீடித்த வாழ்வுக்கவசியமானவைகளில் கண்ணுங் கருத்துமாக இருப்பதாகக் கேள்வி. பெண்களின் தனித்த இடத்தில், பெண்களுடன் தான் இருந்தவரக்கண்டேன். முன் போல், ஆண்களுடன் ஆண் போலவே காட்சியளிப்பதை விடுத்து, இப்பொழுது பெண்மைக்கு முன்மாதிரி போல் இருக்கக் கண்டேன். குர்ஆனின் கோஷா இதுவே.)

ஆகையால் இவர்களின் கட்சியை இந்த மேலே காட்டப்பட்டுள்ள குர்ஆன் பிரமாணம் நாசமாக்கி விடுகின்றது என்ற காரணத்துக்காகவே அதை பிரஸ்தாபிக்காமலே விட்டு விட்டார், ப. பி. ஆசிரியர்.

என் பிரத்தியேகமாக மார்பைக் குறித்து குர்ஆன் மூடச் சொல்லவேண்டும்?[7] தப்ஸீக் பத்ஹுல் பயான் படி 'இயற்கை அழகுக்கு மூலஸ்தானமாயிருக்கும் முகத்தை' இறைவன் மறைக்க வேண்டிய அழகுடன் சேர்த்துக் குறிக்கவில்லை

---

7 குர்ஆன் திட்டவட்டமாய் பெண் மறைக்கவேண்டிய தன் அங்கங்களில் மார்பைப்பற்றிப் ப்ரத்தியேகமாகக் குறித்திருக்கையில், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் நவீன நாகரீக முஸ்லிம்களும், 'இஸ்லாம்' பத்திரிகைகளும் மார்பு எடுப்புடன் கூடியப் பெண்களின் படங்களைப் போட்டு வயிறு பிழைக்கின்றனர். அதிக தூரம் போவானேன். நம்மை, தமிழ் முஸ்லிம்களைத் தட்டி எழுப்பியதாருல் இஸ்லாம் பத்திரிகை கூட இப்பிழைக்கும் வழியைக் கடை பிடிக்கின்றது என்றால் இதரர்களைப்பற்றி விவரிக்கவேண்டியதில்லை.

இஸ்லாத்துக்காகவும், முஸ்லிம்களுக்காகவும் வாழ்ந்ததாக வர்ணிக்கப்படும் எகிப்தின் 'ஷஜரத்துர்' என்னும் முஸ்லிம் அரசியைப்பற்றி எழுதுங்கால், கதையின் ஆசிரியர் முஸ்லிம் அரசியின் அழகை வர்ணிக்கையில் தன் வழக்கத்தை ஒட்டித் தன் வர்ணிக்கும் சக்தியை எல்லாம் கம்பனையும் மிஞ்சும் வகையில் வர்ணிப்பதுடன் நில்லாது, நவீன நடின மாதுக்கள் தங்கள் ஸ்தனங்களில் ஒன்றைக் காட்சி அளிப்பதைப் போல் ஒரு கற்பனைப் படத்தை தா. இ. ன் அட்டை முகப்பில் சித்திரித்து மூவர்ணங்களால் அலங்கரித்திருந்தார். இந்தக் கற்பனை சித்திரத்தை ஷஜரத்துரின் படம் என்று வரையப்பட்டிருந்ததைப் பார்த்த நான் வெட்கப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களிடம் குறை கண்டேன். இவர்கள் உடனே, 'அப்படியெல்லாம் போட்டால் தான் மக்கள் ரசிக்கின்றார்கள்; பத்திரிகை செலவாகின்றது, ப்ரதர்', என்ற கருத்தடக்கிக் கூறினார்கள். இதுபற்றி நீள விவாதிக்கப்பட்டுத் தங்களைத் திருத்திக் கொண்டாலும், இன்றும் கூட தா. இ. ல் வரும் ஷஜரத்துரின் படத்தைப் பாருங்கள், பர்தாவுக்குள் உள்ள ஸ்தனங்களைக் கண்ணைக் கவரும் முறையில்தான் சித்தரித்திருக்கின்றனர்.

இதிலிருந்து விளங்கிக்கொள்ள வேண்டிய உண்மைகள் முன்னரே விளக்கப்பட்டிருக்கின்றன. மார்பின் மகாத்மியமும் விளங்குகின்றது.!

என்ற காரணத்துக்காகவே இந்தப் பகுதியைப்பற்றி மூச்சுப் காட்டவில்லை, ப. பிரமாண நூலில்.

24 : 31 முகத்தையும் மறைக்கும்படி சொல்லாததுடன், முகத்தை மறைக்கவேண்டியதில்லை யென்றும், மறைக்கப்பட வேண்டிய அங்கங்களிலிருந்து முகம் விலக்கப்பட்டுமிருக்கின்றது என்றும் கூறிக்கொண்டிருக்கின்றது என்பதை மறந்துவிடாதீர்கள். இந்த குர்ஆன் பிரமாணத்துக்கு வியாக்யானம் செய்த இயற்கையை உணர்ந்த பல அறிஞர்களும், புகஹாக்களும்,

1) 'பெண்கள் முகம் மறைக்கவேண்டிய அங்கமல்ல'

(ப. பி. P. 40)

2) 'வெளிக்காட்டல் கூடுமான உருப்புகளானது முகம், இரு உள்ளங்கை ஆகியவைகளாகும்' (ப. பி. பக்கம் 41)

3) 'ஓ அஸ்மாவே! முகத்தையும் கைகளையும் தவிர்த்து தன் உடல் தெரியும்படி பருவமடைந்த பெண்கள் உடுத்துவது கூடாது'— (அபூதாவூதின் 31 : 30)

4) "நிச்சயமாக முகம்— மறைக்கவேண்டி அங்கமாகா—',

(ப. பி. ப. 41)

என்று வியாக்யானம் செய்து முகத்தை மறைக்கப்படவேண்டிய அங்கங்களிலிருந்து விலக்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு குர்ஆன் பிரமாணம் 24 : 31 & 33 : 59 களில் வரும் 'போர்த்திக்கொள்ளுங்கள்' என்றதை எந்தெந்த அங்கங்கள் போர்வைக்குள் வரவேண்டியவை, எவை யெவை வரவேண்டியதில்லை' என்று இந்த 24 : 31 ல் வந்துள்ள 4-5 வசனங்கள் விளக்கிக் காட்டியிருப்பதனால் தான் ப. பி. நூலில் இதை எடுத்துக்காட்டி விமர்சனம் செய்யத் துணியவில்லை யென்பது வெளிப்படை. போகட்டும், மேலே சொல்லுவோம்.

குர்ஆன் 24 : 31 ல்,

"(ஐந்தாவதாக) அவர்களின் (1) கணவன்மார்கள், (2) அவர்களின் தகப்பன்மார்கள், (3) அவர்களின் கணவர்களின் தகப்பன்மார்கள், (4) அவர்களின் குமாரர்கள், (5) அவர்களின் புருஷர்களின் குமாரர்கள், (6) அவர்களின் சோதரர்கள், (7) அவர்களின் சோதரர்களின் குமாரர்கள், (8) அவர்களின் சோதரிகளின் குமாரர்கள், (9) அவர்களின் (குடும்பப்) பெண்கள், (10) (அடிமைப் பெண்களும் ஆண்களும் ஆகிய) அவர்களின் வலக்கரத்துக்குப் பாத்திரமானவர்கள், (11) பெண் தேவையற்ற (அலியாகிய) ஆண் வேலையாட்கள், அல்லது (12) பெண்களின் மர்மங்களைப்பற்றி ஞானம் பெறாத குழந்தைகள், இவர்களைத் தவிர்

த்து தங்கள் (சௌந்தர்யமாகிய) 'ஸ்ஜீனத்'தை காட்சியளிக்க வேண்டாம் – – என்று சொல்வீராக''

என்றுள்ள பிரமாணத்தையும் ஊன்றி கவனியுங்கள்.

இங்கே 'ஸ்ஜீனத்' என்பதற்கு அர்த்தங் கற்பிப்பதில் அபிப்பிராய பேதமிருந்துவருகின்றது, இன்று வரைக்கும். முகத்தையும் மூடிக்கொள்ள வேண்டுமென்ற கட்சியினர் 'ஸ்ஜீனத்' என்பதற்கு 'இயற்கை அழகு' என்பர். மற்ருேர் சாரார் ஆடை ஆபரணங்கொண்ட அலங்கரிப்பைக் குறிக்கும் என்பர். இன்னேர் சாரார் செயற்கை அலங்கரிப்புடன் கூடிய இயற்கை அழகைக் குறிக்கும் என்பர். 'ஸ்ஜீனத்' என்பது இயற்கை அழகை மட்டும் குறிக்கின்றதென்பது பொருந்தாது என்று காண்பீர்கள்.

இயற்கை அழகில் முகமும் மார்பும் இன்னும் சில மற்றவையும் சேருகின்றன. என்ருலும் 24 : 31 ல் 4-வதாகப் பரிசீலனை செய்ததில், முகத்தைக் குறிக்காமல் மார்பை மட்டும் ப்ரத்தியேகமாகக் குறித்து, அதை போர்வைக்குள் அடக்கும்படி உத்தரவாகியிருக்கின்றதைப் பார்த்தீர்கள்.

24 : 31 ல், 3-வதாகப் பரிசீலனை செய்ததிலும், அங்கும் 'ஸ்ஜீனத்'தை காட்சியளிக்காதீர்கள் என்று கட்டளையாகியிருக்கின்றது.

இதே 24 : 31 ல் 6 வதாகப் பரிசீலனை செய்யப்படும் பகுதியில் வரப்போகும் கால் தண்டைகளையும் 'ஸ்ஜீனத்' என்றே குறிக்கப்பட்டிருக்கின்றது.

'ஸ்ஜீனத்' என்பதற்கு ஆடை ஆபரணங்கள் முதலிய அழகைக் குறிக்கவில்லை, இயற்கை அழகைத் தான் குறிக்கின்றது என்றுகூட வைத்துக்கொண்டு பார்ப்போம்.

இந்த 'ஸ்ஜீனத்'தை, அதாவது இயற்கை அழகை மேலே விவரிக்கப்பட்ட கணவனுட்பட 12 வகையினரிடம் மறைக்கவேண்டியதில்லை யென்று விலக்களிக்கப்பட்டிருக்கின்றது. தன் கணவரிடமும், அறியாக் குழந்தைகளிடமும் தனிமையில் தன் ஸ்ஜீனத்தையும் மர்மஸ்தானங்களையும் மறைக்காமல் போவதில் குற்றமாகாது. தம் முகமாகிய ஸ்ஜீனத்தை மேலே விவரிக்கப்பட்ட 12 வகையினரின் முன்பும் மறைக்காமலிருப்பதிலும் தப்பில்லை. ஆனால் மார்பும் ஸ்ஜீனத்தில் வருகின்றது, இதையும் இப்பன்னிருவர் முன்னிலும் மறைக்காமல் விட்டுவிடுவது கூடுமானல் சரி, ஸ்ஜீனத் என்பது இயற்கை அழகையே குறிக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளலாம். இல்லை யென்ருல், 'ஸ்ஜீனத்' என்ருல் இயற்கை அழகை மட்டும் குறிக்கவில்லை என்றேற்படுகின்றது.

இயற்கை அழகை மட்டும் 'ஸ்ஜீனத்' என்பது குறிக்கவில்லை யென்பதற்கு

"(ஆருவதாக) தங்களுடைய அலங்காரத்தில் மறைந்திருப்பதை அறிவிக்கும் நோக்கத்துடன், தங்களுடைய கால்களைத் தட்டி நடக்கவேண்டாம் - - - - என்றும் கூறுவீர்களாக - -"

என்றுள்ள 24;31 ல் வரும் கால்நகை நீங்கிளோடுஸ் ஸீனத் என்றே குறிக்கப்பட்டிருக்கின்றது.

177201

கால்களைத் தட்டி நடப்பதால் போர்வைக்குள்ளடங்கியுள்ள ஆபரணங்களின் சப்தம் வெளியாகிப் பிறருடைய எண்ணத்தைத் திருப்புமாகையால், அப்படி செய்யக்கூடாது என்பது 6 வது வசனத்தின் பொருள். இங்கே கால் தட்டுவதால் ஆபரண சப்தம் வெளியாவதைத் தவிர்த்து வேறு என்ன இயற்கை அழகு வெளிப்படப் போகின்றது, போர்வைக்குள்ளுள்ள கால் முதலிய அங்கங்களிலிருந்து.?? சிந்தித்துப்பாருங்கள், நிதானமாக, விருப்பு வெறுப்பின்றி.

'ஸ்ஜீனத்'க்கு எந்த அர்த்தமாவது இருந்துகொண்டு போகட்டும். நமக்கு அதுவிஷயமாய் சண்டை இங்கே வேண்டியதில்லை. நாம் தெரிந்துகொள்ள வேண்டியது,

"யாரிடம் எதை மறைக்க வேண்டியது, எப்பொழுது?; முகம் மறைக்கப்படவேண்டிய அங்கம் தானா'? வென்பதே.

இன்னமுமல் கவனியுங்கள். வீடடங்கிக் கிடக்கும் பெண்களுக்கு, வெளியே செல்லக்கூடாத பெண்களுக்கு, 'வீட்டிற்குள் இன்னின்னாரிடம் இவ்வாறு இருந்துகொள், என்றும், மற்ற நேரங்களில் மற்றவர்களிடையில் பார்வையைத் தாழ்த்திக்கொண்டும், மர்மஸ்தானங்களைக் காத்துக்கொண்டும், ஸௌந்திரியங்களை காட்டாமலும், மார்பின் மேல் போர்வையைப் போட்டுக்கொண்டும், கால் தண்டைகளின் சப்தம் வராமலும் நடந்து கொள்ளும்படியும் சொல்லவேண்டிய அவசியமென்ன வென்பதே.

இப்பொழுது விளங்குகின்றதா, பெண்கள் வெளியே செல்லுவதற்குத் தடை யொன்றும் கிடையாது. என்றும், வெளியே செல்லுங்கால், குர்ஆனுக்கு முதல் வியாக்கியானியாகிய ரசூலுல்லா அவர்களின் வியாக்யானப்படி

'ஸௌந்தர்யமும் சிங்காரமும் இல்லாத முறையில் வெளி வரலாம்'—

என்றும்; மேலும் மறைக்கப்பட வேண்டாத அங்கங்களில் முகமும் சேர்ந்தது என்றும்; ஆகையால் முகமூடியை வற்புறுத்த ஆண்களுக்கு உரிமை ஒன்றும் கிடையாது' என்றும். (தெள்ளென விளங்கிவிட்டது). நிற்க.

பர்தா பிரமாணப் பரிசீலனையில் இன்னொன்றும் கவனிக்கவேண்டி யிருக்கின்றது.

33 : 59 ல் கண்ட குர்ஆன் பிரமாணத்தை எடுத்துக் காட்டிய ப. பி நூலாசிரியர், தன் கட்சிக்குப் பாதகமான, ஆனால் ப்ரச்னைக்கு சம்பந்தப்பட்ட 33 : 60 வது பிரமாணத்தையும், 33 : 59 வது பிரமாணத்தின் பிந்திய பகுதியையும் விட்டு விட்டு, ப. பி. பக்கம் 34 ல்,

"ஏ நபியே! உமது மனைவி மார்க்கட்கும், உமது பெண் மக்களுக்கும், இதர மூமினான பெண்மணிகட்கும் அவர்கள் எல்லாம் தங்கள் போர்வைகளை தங்கள் மீது மூடிக்கொள்ளவேண்டு மென்று சொல்வீராக"

என்று குர்ஆன் 33 : 59 ம் வாக்கியத்தின் மூன் பகுதியை மட்டும் எடுத்துப்போட்டு முடித்துவிட்டிருக்கின்றார்.

மேலும், இதற்குத் தன் கைச்சரக்கை சேர்த்து, "பெண்கள் தங்கள் போர்வையால் முகங்களை மூடிக்கொள்ள வேண்டுமென மிக விளக்கமாக கூறப்பட்டிருக்கின்றது" என்று துணிச்சலாக வியாக்யானம் செய்திருப்பது ஒரு புறமிருக்க, மேற்படி 33 : 59 பிரமாணம் பூர்த்தியானதாகக் கருதும்படியும் காட்டியிருக்கின்றார்.

குர்ஆன் 33 : 59 ல், முஸ்லிம் இயக்கப் பெண்கள் தங்கள் உடல் அழகு, ஆபரணங்களை மறைக்கும் முறையில், ஆண்களுக் கவசிய மென்று கட்டாயப்படுத்தாத ஒரு மேலங்கியை, (நம் நாட்டுப் பாஷையில் ஒரு அங்கவஸ்திரத்தை,) நம் பெண்மணிகளுக்குப் பிரத்யேகமாக (Prescribe) அவசியம் என்று விதித்திருப்பதற்கு ஒரு பிரத்யேகக் காரணம் இருக்கவேண்டுமல்லவா? அந்தக் காரணத்தை, மேற்படி அங்கவஸ்திரத்தை உடுத்தும்படியாக விதித்த மேற்படி குர்ஆன் 33 : 59 லேயே விளக்கப்பட்டிருக்கின்றது. ப. பி. ஆசிரியர் மறைத்து விட்டதும், பெண்களுக்கு ஒரு அங்கவஸ்திரத்தின் அவசியத்தை விளக்கிக் காட்டும்படியானதுமான இந்த 33 : 59 ன் பிற்பகுதியாவது:—

(முஸ்லிம் இயக்கப் பெண்களுக்கு ஒரு மேலாடை அவசியமே னென்று கேட்பீர்களானால்,) "அதனால் அவர்கள் கண்ணியமானவர்கள் என அறியப்பட்டு, எவருடைய துன்பத்திற்கும் அவர்கள் உள்ளாகாதிருப்பதிற்கு இது சுலபமான வழியாகும் - -" என்பதே.

இப்படி, 33 : 59 ன் பின் பாகத்தையும், இதைத் தொடர்ந்த 33:60 ஐயும் மறைத்ததற்குக் காரணம், '33 : 59 பெண்கள் வெளியே செல்லுவதைத் தடை செய்யவில்லையே!' என்பதைக் காட்டுகின்றதே என்ற பயமே என்பது விளங்கும்.

இதை மறைத்துவிட்டு, அரை குறையான குர் ஆன்

பிரமாணத்துக்கு முன்காட்டியபடி தப்பாகவும் நாணயக் குறைவாகவும்,

"போர்வையால் முகங்களை மூடிக்கொள்ள வேண்டுமென மிக விளக்கமாக கூறப்பட்டிருக்கின்றது"

என்று எழுதியதுடன் நில்லாது,

"—இத்திருவசனங்களிலிருந்து பொதுவாக மூமினான பெண்களெல்லாம் வீட்டுக்குள் அடங்கி கோஷாயிருப்பது கடமையாகுமென்பதும், வீட்டினின்று வெளிப்படுவது பாபத்திற்கும், விபச்சாரத்துக்கும் - - காரணமாகுமென்பதும் - - - பட்டப் பகலைப்போல் வெட்ட வெளிச்சமாக நன்கு விளக்கமாகின்றன"

என்று ப. பி. நூலாசிரியர் மௌலவி அஹமத் ஸயீத் சாஹிப் கயிற்றைத் திரித்திருக்கின்றார், தன் மனம்போன போக்கில். உண்மையில் இவருடைய துணிச்சலே துணிச்சல்! நம் பெண்கள் வீட்டை விட்டு வெளிச் செல்வது விபச்ராரத்துக்கும் காரணமாகுமாம்!!. நிற்க.

குர்ஆன் 33 : 59 வெளியாக வேண்டிய அவசியத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

இன்றைக்கு குடும்பப் பெண்களில் நவ நாகரீகிகள் நடிகைகள் போல் காட்சியளிப்பதுபற்றி முன்னரே கண்டீர்கள். இது 20 ம் நூற்றாண்டின் நாகரீகக் கோலம் என்றால், 5–6 வது நூற்றாண்டின் அந்தகாரக் கோலத்தைப்பற்றி விவரிக்கவும் வேண்டுமா?

எனக்கு, மலைகளிலும், நாகரீக மனித சஞ்சாரமற்ற மலையடிவாரங்களிலும் வசிக்கும் 'லம்பாடி' என்னும் ஜாதியினருடன் பழக்கமுண்டு. இன்றைக்கும் கூட இவர்கள் தங்கள் மனைவிகளை ஒரு காமக் கருவிகளாகவே கணித்து வருகின்றனர். ஆண்களோ நவ நாகரீகத்தை ஒட்டித் திருந்தி வருகின்றனர். ஆனால் தம் பெண்ஜாதியினரிடம் எவ்வித மாறுதலையும் விரும்புவதில்லை.

அவர்கள் உடையெல்லாம் ஒரு 'லங்கர்' வெனும் பாவாடை, 'ச்சோளி' யெனும் ரவிக்கை, 'ச்சாதர்' என்னும் துப்பட்டி, தான். ரவிக்கை மார்பை மூட மட்டுந்தான்—முதுகை மூடாது. வயிறும் திறந்திருக்கும். ரவிக்கை ஸ்தனங்களை அலங்கரித்து எடுத்துக் காட்டும் முறையில் கண்ணாடி & மைகாத் துண்டுகளால் அமையப் பெற்று டாலடித்துக் கொண்டிருக்கும். இவர்களின் இவ்வாடைகளனைத்தும் பல்நூறு வர்ணத்துண்டுத் துணிகளால் அமைக்கப்பட்டிருக்கும். இவள் வெயிலில் செல்லும் பொழுது அந்த கண்ணாடித் துண்டுகள் டாலடிக்கும், வெகு தூரம் வரைக்கும்.

ஆண்கள் கூட்டமாய் உட்கார்ந்து கொண்டு வெகு தூரத்தில் வரும் தன் மனைவி மக்களைச் சுட்டிக்காட்டிப் புகழ்ந்து கொண்டிருப்பர், கண்ணாடித் துண்டுகளின் மேல் விழும் சூரிய ஒளியின் டாலடிப்பைப் பார்த்து. இப்படி இன்னும் பல ரசிக்கும்படியான பழக்கவழக்கமுண்டு இவர்களிடையில்.

'மார்பை ஏன் பிரத்யேக ஏற்பாட்டுடன் மறைத்து வைக்கவேண்டும்' என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. என் சொந்த அனுபவத்தில் சில சொல்லுகின்றேன். ஊர் பெயர் ஞாபகமில்லை. 30 வருஷங்களுக்கு முன் மலையாளப் பாலக்காட்டுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மாபெரும் திருவிழாவுக்குப் போய் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். வான வேடிக்கை நடந்துகொண்டிருக்கின்றது. பல யானைகள் அலங்கரிக்கப்பட்டு காட்சி யளித்துக்கொண்டிருந்தன. மக்கள் 'தெய்வபக்தி' யிலாழ்ந்து இருந்தனர். ஆண் பெண் கலந்து உட்கார்ந்திருந்தனர். விஷமிகள் முலைப்பாலைப் பீச்சிக்கொண்டிருந்தனர். பெண்கள், கூட்ட நெருக்கடியில் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் சகித்துக்கொண்டிருந்தனர். இந்த விஷமம் அந்தத் திருவிழாவில் சகஜமாம். இன்று இப்படி நடக்காது. காரணம், இயற்கை விதியை ஒட்டி பெண்கள் தங்கள் மார்பை ஒரு ரவிக்கை, அதன் மேல் ஒரு ஜம்பர், அதன் மேல் ஒரு அங்க வஸ்திரத்தாலோ, சேலையாலோ மூடிப் பாதுகாத்துக்கொள்ளுகின்றனர்.

மற்றோர் சமயம் எங்கள் மலையாள சுற்றுப்பிரயாணத்தின்பொழுது பொன்னானி என்னும் ஒரு கிட்டில் ஒரு உயர் குலத்தினர் வீட்டில் விருந்தினராகத் தங்கினோம். அங்கு சென்றவுடன் என் வழக்கத்தை ஒட்டி இயற்கைத் தோற்றங்களை போட்டோ எடுத்து வந்ததைப் பார்த்த அவ்வீட்டு இரு குமரிகள் ஆஜராகித் தங்களையும் படமெடுக்கும்படி விரும்பினர். அவர்களின் மார்புகள் திறந்திருந்தன. என் நண்பரின் யோசனையைக் கேட்டேன். 'பரவாயில்லை; ஊர் வழக்கம் — —' என்றார். எனக்கென்னவோ விபரீதமாக முடிந்தாலும் முடியலாம் என்ற யோசனை முன் நிற்கவும், படம் பிடித்துவிட்டதாகப் பாசாங்கு செய்து அவர்களை ஏமாற்றிவிட்டேன். இப்படி 1921 அல்லது 1922 ல் நடந்தது. இன்று அங்கு இந்நிலை மாறி மார்பை மறைக்க ப்பிரத்யேக ஏற்பாடாகி இருக்கின்றது. (இந்த மாறுதல்களை 1500 வருஷங்களுக்கு முன் கல்வி வாசனையே அற்ற கை நாட்டுக் காட்டரபி வற்புறுத்தி அமலில் கொண்டுவந்துவிட்டார் என்றால் — — —. இது வேறு விஷயம்.)

இன்றைக்குமிப்படியானால், அக்கால அந்தகார காட்

டராபிகளின் பழக்க வழக்கங்களைப்பற்றி விவரிக்கவேண்டியதில்லை. அவர்களுடை மாற்றாந்தாய்கள் அவர்களுக்கு மனைவியாவார்கள். பெண்களைத் தட்டுமுட்டு சாமான்களாகவும்—காமக் கருவிளாகவும் கருதி நடாத்தி வந்தனர். புஜபலமுடையன் வைத்தது சட்டம். பெண்கள் தங்கள் மார்புகளை, 'வள்ளி'யில் வள்ளியாக வந்த பெண்ணைப்போல் அலங்கரித்துக்கொண்டு காட்சியளித்து ஆண்களை பஜார்களில் மகிழ்விப்பது அவர்களின் நாகரீகமாயிருந்து வந்தது.

இ(வ்வ)நாகரீகத்தினர்களிலிருந்து சிலர் முஸ்லிம்களாக, அதாவது ஆஸ்திக அடிப்படையில் சு.ம. க்காரர்களாக மாறி, தன் மானத்துக்காகப் போராட்டம் நடாத்தி வந்தார்கள். இவர்களுடைய பெண்களிலும் மாறுதல் அவசியமாயிற்று. இன்றைய சு. ம. க்காரர்களில் பலருடைய பெண்கள் அதற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அவர்களை மாற்றுவது சிரமம் என்கின்றனர் நம் நாட்டுத் தோழர்களும், தலைவர்களும். புருஷன் சு ம. கட்சித் தலைவனாக இருக்கின்றான். தாய்—பெண்சாதி—தகப்பன்—மக்கள் நேர் எதிரிகளாயுள்ளனர்.

இதே நிலைதான் ஏறக்குறைய அக்காலத்திலும். இந்நிலையை மாற்றவே மேற்படி கட்டளைகள் அவசியமாயின. மாறுதலின்றியே அக்கால சு. ம. அராபியப் பெண்கள் வெளியில் சென்றால் அவர்கள் சு. ம. க்காரர்களா, பழமை விரும்பிகள்தானென்று அடையாளங் கண்டுபிடிக்க முடியாமல், முஸ்லிம்களாக மாறிய சு. ம. க்காரப் பெண்களையும் வழக்கம்போல் தொந்திரவு கொடுத்து வந்தனர், சு. ம. யற்ற, முஸ்லிமாகாத அராபியர்களும், காலிகளும், காமிகளும்.

கேட்டால், 'வேறுபட்டவர்களென்று அடையாளங் கண்டுபிடிக்க முடியவில்லையே' என்ற சமாதானங் கூறித் தப்பித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையை சமாளிக்கவே, எப்படி சு. ம. க்காரர்கள் என்று இதரர் அடையாளந் தெரிந்து கொள்ளவேண்டுமென்று கருஞ்சட்டை அணியும்படி அவர்களின் தலைவர் கடுமையான உத்திர விட்டிருக்கின்றாரோ, அதை ஒட்டியே முஸ்லிம் பெண்கள் என்று அடையாளந் தெரிந்துகொள்ளுவதற்காகவும், முஸ்லிமாகாதப் பெண்கள் காமத்தைக் கிளரும் முறையில் அலங்கரித்துக்கொண்டு போவதைத் தடுத்து, அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கவுமென்றே 33 : 33, 33 : 59, 24 : 31 முதலிய குர்ஆன் கட்டளைகள் பிறந்திருக்கின்றன.

அலங்கரித்துக் கொண்டிருக்கையில் வெளியில் செல்லாமல் வீடடங்கி தங்கள் கணவர்களுடன் தனித்திருக்கும்படி 33 : 33 லும், வெளியே செல்லுங்கால் தங்கள் இயற்கை

செயற்கை அழகுகளால் ஆண்களின் காம உணர்ச்சி கிளரப் படாதிருக்கவும், 'ஓ' இவர்கள், போர்வை போர்த்தவர்கள், முஸ்லிம்கள், மாறுபட்டவர்கள், இவர்களிடம் சரச சல்லாபம் செய்யக்கூடாது,' இவர்கள் நமது லீலைகளுக்கிணங்கமாட்டார்கள், இவர்களை அணுகினல் சு. ம. அரபிகளாக மாறிய முஸ்லிம்களின் எதிர்ப்புக்காளாக நேரிடும்' என்று அடையாளங்கண்டுகொள்ள ஹேதுவாக இருக்கவும், வழக்கமான உடைக்கு மேல் பிரத்தியேகமாக ஒரு போர்வையைக் கொண்டு தங்கள் அழகுகளையும் போர்த்திக்கொண்டு போகும்படி 33 : 59 லும் 24 : 31 லும் உத்திரவாகியிருக்கின்றது.

33 : 60 ல், இப்படி சுயமரியாதையின் அடையாளமாகிய போர்வையுடன் வெளிக்கிளம்பும் பெண்களையும் அயோக்கிய அரபிகளும், அவதூறு பேசும் குரும்புகார யூதர்களும், தொடர்ந்து தொந்திரவு கொடுப்பதானல், அவர்கள் நசித்துப்போகும்படி செய்வதாக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது. அப்படியே அவர்கள் நாளடைவில் நசித்துப் போயினர். இறுதிநபியவர்களின் காலத்திலேயே மதிணு நகரத்தில் விஷமிகள் இல்லாது அழிந்து விட்டனர்.

ப. பி. ல், பெரும்பாலாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 'புகாரி' என்னும் மாபெரும் பேராசியரின் பர்தா சம்மந்தமான உயர்ந்த ஆராய்ச்சி முடிவுகள் கையாளப்படவே இல்லை. ஏன்? அவர் நம் மௌலவி சாஹிபை ஆதரிக்காத காரணத்துக்காகவே.

1) "பெண்கள் தங்கள் காரியங்களுக்காக வெளியே செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளது" (ஹதிஸ் (ஹாஜா) புகாரீ 4 : 13; 67 : 46)
2) பெண்கள் முகமூடி யின்றியே மசூதிகளுக்கு வரும் பழக்க மிருந்ததாக அல்இமாம் அபு ஜாபிர் முகம்மது பின் ஜாரிர் தபாரியின் ஜாமி அல்பயான் - தப்ஸிரில் குர்ஆனில் XVIII : 84 ல் காணலாம்.
3) புக்காரி 25 : 23 பிரகாரம் ஹஜ் காலங்களில் பெண்கள் முகமூடி அணியக்கூடாது என்று தடை உத்திரவு இருந்திருக்கின்றது.

## முகமூடி எப்படி அமலில் வந்தது?

அக்காலத்திலும், எக்காலத்திலும், இக்காலத்திலும் இருந்ததும், இருப்பதும் போல் உயர்குலப் பெண்கள் எல்லா தேசத்திலும், எல்லா மதத்தினரிலும் முகமூடி அணிவது சகஜம்.

அப்படியே அக்காலத்து அரபியர்களிடையிலும் செல்வ சீமாட்டிகள் முகமூடி அணிவது வழக்கமாக இருந்ததால்,

இஸ்லாம் அமலுக்கு வந்ததன் பலனாக தொழுகை காலத்திலும், ஹஜ் எனும் மக்காவில் கூடும் வருஷாந்திர அகில உலக முஸ்லிம் மகா நாடு நடக்கும் காலத்திலும் முகமூடி அணிவது கூடாது என்று இறுதிநபியாகிய ரசூலின கட்டளை (ஹதீஸ்) இருக்கின்றது. (புக்காரி 25 : 23)

தொழுகை நேரங்களிலும், ஹஜ் காலங்களிலும் முகத்தை மூடக்கூடாது என்று ஸ்பஷ்டமான ஹதீஸ் இருக்கையில், மற்ற காலங்களில் 'முகமூடி அவசியம்' என்று ஏதாவது ஸ்பஷ்டமான கட்டளை இருந்திருக்க வேண்டும். ஆனால் இல்லை, குர்ஆனிலும்–ஹதீஸிலும் எங்கும் காணக்கிடைக்கவில்லை.

மேம்போக்காகப் பார்க்கையில், ஹஜ்காலத்தில் ஆண்களும் பெண்களும் நெருங்கிக் கலக்கவேண்டி வருகின்றது. ஹஜ்ஜின் பொழுது மனது பரிசுத்தமாய் களங்கத்துக்கிடமில்லாமல் இருக்கவேண்டியது அவசியம். அப்பொழுது முகமூடி அவசியம் என்று உத்திர விருக்க வேண்டு மென்று யாரும் எதிர்பார்ப்பர். ஆனால் அப்பொழுது தான் முகமூடி அணியும் வழக்க முடையவர்களும், முகமூடி அணியக் கூடாது என்று உத்திரவாகி இருக்கின்றது. இதிலிருந்த முகமூடி அணியவேண்டு மென்று மறைமுகமான யோசனையும் கிடையாது என்றேற்படவில்லையா? மேலும், இதிலிருந்து, முகமூடி அணிவது இஸ்லாமிய கட்டளைப்படியோ, பழக்கத்தை ஒட்டியோ அல்லவென்றும்; அஃதோர் தொன்று தொட்டு வந்த பழக்கமேதான் என்றும்,

**இஸ்லாமிய பர்தா வெல்லாம், 24 : 30, 31 படி கண்களின் பார்வையை இருபாலாரும் கீழ்நோக்கி நடந்துகொள்வதேயாகும்,** என்பதும் தெள்ளென விளங்கக் கிடக்கின்றது.

பர்தாவுக்குள்ளிருந்து கொண்டே பர புருஷர்கள் பார்க்கும் பயமின்றி பெண்கள் பர புருஷர்களைக் காமக் கண்ணால் பார்க்கலாம். **ஆனால் குர்ஆன் 24 : 30 கட்டளைப்படி ஆணும், 24 : 31 படி பெண்ணும் பார்வையை (கடைக்கண் பார்வையை) ப்பரிமாறிக் கொள்ளாமல் நடந்துகொண்டால் எப்பொழுதும் தீய எண்ணத்துக்கிடமே இல்லை.**

4) 'மறைக்கப்பட வேண்டாத அங்கங்கள் முகமும் கரங்களும் என்பதுதான் பெரும்பாலான குர்ஆன் வியாக்யாணிகளின் அபிப்ராயம்' (ஜாமியில் பயான்பி தப்ஸீரில் குர்ஆன் XVIII : 84; & R. M. VI P. 52.)

இவ்வாறு குர்ஆனுக்குப் பொருந்தும்படியான பல ஹதீஸ்களும் தீர்ப்புகளும் உள்ளன.

'மேல் போர்வை போடவேண்டியதின் அவசியம், சௌக்

தர்யங்களை மறைப்பதற்கு மட்டுமல்ல, முஸ்லிம் பெண்களை மற்ற பெண்களிலிருந்து பிரித்து, முஸ்லிம் பெண்கள் கௌரவமும் சுயமரியாதையு முள்ளவர்கள் என்று அடையாளங் கண்டுகொள்ளவும் அவசியமாயிற்று என்பது குர்ஆன் 33 : 59ல் இருந்து முன்னரே தெரிந்து கொண்டோம். இந்த மேல்போர்வையும் வெளிமைய தொந்திரவு ஏற்படுங் காலையில்தான் முஸ்லிம்கள் — அல்லாதார் என்று பிரித்துக்காட்டவே அவசியமாக்கப் பட்டதென்றும் 33 : 59 & 60ல் இருந்து விளங்கக் கிடக்கின்றது. கிழவிகளுக்கோ இந்தப் போர்வையே அவசியமில்லையென்று 24 : 60 கூறுகின்றது.

பர்தா சம்பந்தமான குர்ஆன் பிரமாணங்களில் 33 : 33, 33 : 59, 24 : 30, 24 : 31, 24 : 60 இந்த ஐந்தே நேரிடையான சம்பந்தமுள்ள பிரமாணங்கள்.

இவைகளில் 24 : 30, 31 மட்டும் பொதுவாக எக்காலத்துக்கும், மனித வர்க்கமனைத்துக்கும் என்று வெளியிடப் பட்டிருக்கின்றது. 33 : 33, 35 இறுதிநபியவர்களின் மனைவிமார்களுககுச் சொல்லும்படி வெளியானவை. 33 : 59 நபியவர்களின் மனைவி மக்களையும், அக்கால மதினாவிலிருந்த முஸ்லிமானவர்களையும் குறித்து வெளியானவை. 24 : 60 பொதுவானதானாலும் வயதான பெண்களுக்கு, அதாவது மாத விடாய் நின்று, ஆண் சேர்க்கை சபலம் ஒழிந்து பருவம் தளர்ந்த பெண்களுக்கு போர்வை அவசியமில்லை என்பதற்காக வெளியானதாகும்.

33 : 33, 53, 59 பிரமாணங்கள் நம்மனைவரையும் குறித்து வெளியாக வில்லையானாலும், அவை நம்மனைவருக்கும் பொருத்தமானதாகவே அமைந்திருக்கின்றன. இன்றைக்கும் நடிகைகளைப்போல் நவநாகரீக ஒட்டக்கால் பெண்கள் வெளிக்கிளம்புவதை அவர்களின் ஆண்களே வெறுக்கத்தான் செய்கின்றனர், தடுக்க முடியாவிடினும். வெள்ளையர்களும் தங்கள் பெண்கள் கைமிஞ்சிப் போய்விட்டனரே, அவர்களின் சுயேச்சை சாபக்கேடாக மாறிவிட்டதே என்று கைசேதப்படுகின்றனர். இதுபற்றிய விபரம் பின்னர் காண்பீர்கள்.

ஆகையால், 33 : 33, நபியவர்களின் மனைவிமார்களுக்கென்று வெளியானதானாலும், மனித சமூகத்துக்கு இன்றைக்கும் நாளைக்கும் என்றைக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது.

அப்படியே 33:53 ல் கண்ட கட்டளையும். ஆண் பெண் கலப்பு விஷயத்தில் குறை காணாத படித்த ஹிந்து, கிறிஸ்து

வர்களும், மேல் நாட்டாரும் கூட இப்பொழுது தங்கள் வீடுகளின் வாயில்களில் திரை போடுவதைப் பார்க்கலாம். முன்போல யாரும் உத்திரவின்றி உள்ளே செல்ல முடியாது. திரைக்கு வெளியே நின்றுதான் கூப்பிடவேண்டும், பேச வேண்டும். அனுமதி கிடைத்த பிறகுதான் உள்ளே பிரவேசிக்கவேண்டும். இந்தப் பழக்கம் எங்கும் பரவி வருகின்றது. இக்கட்டளையின் அவசியமெல்லாம், அக்காலத்தில் கேள்வி கேட்பாரின்றியே யாரும் யார் வீட்டில் நுழைவதும், புஜபலமுடையவன் பெண்களை அவமானப்படுத்துவதும் சகஜமாகவிருந்தது.

அது அநாகரீகப் பழக்கமாகையால், அது தொடர்ந்து நடக்காதபடி தடுக்கவே உத்திரவின்றி பிறர் இல்லங்களில் நுழைவதைத் தடுத்து, எதுவும் கேட்கவேண்டுமானால் திரைக்கப்பாலிருந்தே கேட்கவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. இதுபோன்ற உபதேசங்கள் யாரும் வரவேற்கத் தக்கதே.

33 : 59 ன் அவசியத்தைப்பற்றி முன்னரே விபரமாகத் தெரிந்துகொண்டீர்கள். இது, முஸ்லிம்கள்—அல்லாதார் என்று பிரித்துக்காட்ட, அதுவும் காலிகளின் நிர்பந்தம் நேருங்கால் தான், அடையாளத்துக்காக ஒரு மேலங்கியைப் பிரத்தியேகமாகப் போட்டுக் கொண்டு போகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது எல்லா-எக்காலத்திலும் அவசியமில்லை என்று தோன்றுகின்றது.

24 : 30, 31 தான் நம் மனைவரையும் எக்காலத்துக்கும் கட்டுப்படுத்துவதாக இருக்கின்றது.

24 : 30—"ஆடவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்தும்படியும், மர்மஸ்தானங்களைக் காத்துக்கொள்ளும்படியும்"

சொல்லும்படி நபியவர்களுக்கு அல்லாஹ் சொல்லியிருக்கின்றான். இதற்குப்பின் தான் 24 : 31 ல் மேல்கண்டபடி பெண்களுக்கும் சொல்லும்படி சொல்லிவிட்டு, மேற்கொண்டு பிரத்யேகமாய் ஒரு தலை மூடி[8]யைக் கொண்டு தங்கள் மார்பைப் போர்த்திக் கொள்ளவேண்டுமென்ற ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதுபற்றி முன்னரே பல சந்தர்ப்பங்களில் விளக்கப்பட்டிருக்கின்றது.

---

8 இதை மௌலானா முஹம்மதலி சாஹிப் தன் ஆங்கில மொழி பெயர்ப்பில் Head covering என்கின்றார். அரபியில் உள்ள இப்பதத்துக்கு 'தலைமூடி' என்று ஏற்படுகின்றதா வென்பதே சந்தேகத்திலிருக்கின்றது. அதாவது, மார்

இங்கே ஒரு விஷயத்தை முக்கியமாக கவனிக்கவேண்டியதிருக்கின்றது.

24 : 30 ல், முதலில் ஆண்களைத்தான் கோஷா அனுஷ்டிக்கும்படி எச்சரித்து விட்டு, பின்னர் தான் பெண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றனர். கோஷா வென்றால் கண் பார்வையை மேல் புருவமாகிய பர்தாவின் கீழ் கொண்டுவருவதென்பதே குர்ஆனின் கருத்து. முன்னரே விளக்கி யிருக்கின்றேன், ஆண் தன் பார்வையை கீழ்நோக்கி அதாவது மேல் புருவமாகிய பர்தாவுக்குள்ளாக்கி நடந்து கொண்டால், யார், எந்தப் பெண் எந்த நிலையில், நிர்வாணமாகப் போனால்தான் என்ன? யார் அவனை மயக்கி விடமுடியும்? கண்ணைப் பர்தாவுக்குள் வைத்து நடத்துவது சுலபமான காரியமல்ல. இதற்கு நல்லெண்ண மென்பதும் பக்குவப்பட்டு ஒத்துழைக்கவேண்டும்; பயபக்தி அவசியம்.

குர்ஆன் கட்டளைப்படி ஆண் நடந்துகொண்டால் பெண்ணைப்பற்றிய கவலையே வேண்டியிராது. ஆனால் அப்படி நடக்கமாட்டான் என்றறிந்து தான் போலும், நான் 24 : 30 ன் கட்டளைப்படி பார்வையைக் கீழ்நோக்கி நடக்கின்றேனே இல்லையோ, பெண்கள் பார்வையைத் தாழ்த்திக்கொண்டு நடந்து கொண்டால், ஆணைப்பற்றி அவன் தன்னை (பெண்ணை) பார்க்கின்றானா, பார்த்தானா என்ற கவலை வேண்டியதில்லை. கண்ணோடு கண் கலந்தால தான் காமம். வெறும் கண் கலப்பினால் காமம் கலக்கமடைந்து விடாது. காமக்கண்ணென்றொன் றுண்டு. அதைக்கொண்டு பார்வையைப் பரிமாறிக்கொண்டால்தான் (ஷைத்தானெனப்படும்) விஷமிக்கு இடங்கிடைக்கின்றது.

காம இச்சைக்கான எண்ணத்தைக் கொண்டு பார்ப்பது

---

புடன் தலையையும் சேர்த்து போர்வையால்மூட வேண்டுமென்பதா குர்ஆனின் கருத்து என்று இன்னமும் ஆராய்ச்சி செய்து விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. 'தலைமூடி' என்பதைவிட் மேலாடை - மேலங்கி - அங்க வஸ்திரம் - அல்லது மேல் போர்வை என்று அர்த்தம் கொண்டால் பொருத்தமாயிருக்குமல்லவா வென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இந்த வஸ்திரத்தை எப்படியும் பயன்படுத்தலாம்; தலைமூடியாகவும், முகமூடியாகவும், அதே காலத்தில் அதைக்கொண்டு மார்பையும் மேலங்கத்தையும் மூடிக்கொள்ளலாம். இதற்கு உர்துவில் 'ஒட்னி' 'தாவ்னி' என்பர். குர்ஆனும், பகுத்தறிவும் வேண்டுவதெல்லாம் மார்புடன், இயற்கை செயற்கை அழகுகள் பிறர் கண்ணைக் கவராத முறையில் அவைகளை மறைத்துக்கொள்ள வேண்டியதே.

தான், (ப. பி. நூல் பக்கம் 28 ல் கண்டபடி), ஹராமென்று விளங்குகின்றது. ஆகையால் இஸ்லாமிய பர்தாவெல்லாம் காம இச்சைக்கான எண்ணத்தைக் கொண்டு ஆண்-பெண் பரஸ்பரம் பார்வைகளைப் பரிமாறிக் கொள்ளாதிருத்தலே வென்பது இப்பொழுது விளங்குகின்றது.

'ஆண்கட்கு பெண்கள் மீது இச்சை செல்வது இயற்கை குணமாயிருந்து வருகிறது' என்று ப. பி நூலாசிரியரே (பக்கம் 28 ல்) எழுதியிருக்கின்றார். 'ஆகவே அதினின்று ஒவ்வோராடவரும் பேணிக்கொள்ள வேண்டு'மே யொழிய, பெண்கள் 'வீடடங்கித் தனித்து உறைந்து' கிடக்க வேண்டியதில்லை; இப்படி இருக்கும்படி கடவுள் கட்டளையுமில்லை. இங்கிலையில், இப்படித் தங்கள் பெண்கள் உறைந்திருக்கும்படி செய்ய நாம் ஆண்கள் அதிகாரம் பெற்றில்லை; அப்படியே பெண்கள் இப்படி உறைந்திருக்கக் கட்டுப்பட்டுமில்லை'

என்று பர்தா பிரமாண நூலில் காட்டப்பட்ட குர்ஆன் பிரமாணங்களிலிருந்தே நிரூபிக்கப்பட்டு, உண்மை பர்தா வென்னவென்று தெரிந்துகொண்டோம்.

கோஷா பர்தா வென்பதெல்லாம்,

(1) 'அன்னிய ஆடவனும் பெண்ணும் தனித்திருத்தல் கூடாது', (ப. பி. பக்கம் 28)

(2) 'எந்த அங்கத்தையும் காம இச்சையான எண்ணத்தைக் கொண்டு பார்க்கடாது', (ப. பி. பக்கம் 28) (குர்ஆன் 24 : 31—1-ம் வசனம்)

(3) 'பெண்களின் உடை அவர்களின் அங்கங்கள் பெரியவை, சிறியவை யென பார்ப்பவர் மதிப்பிட முடியாதபடி இருத்தல் வேண்டும்', (ப. பி. பக்கம் 65) (அதாவது 24 : 31 ல் 4-ம் வசனத்தில் கூறியபடி மார்பின் எடுப்பு முதலியன தெரியாதபடி தலை மூடியால் மறைத்துக்கொள்ளவேண்டும்!) என்பதே.

இதுவரை, பர்தா விஷயமாக குர்ஆன் பிரமாணங்களையும், அவை விளங்கிக்கொள்ள அவசியமான ஹதீஸ்களையும், நம்பத்தக்க 'பிக்ஹு' சட்டம் முதலிய தக்க ஆதாரங்களையும் கொண்டு பர்தா வென்பது மேலே சுருங்கச் சொல்லி விளக்கியிருப்பதே வென்பதை உணர்ந்தீர்கள்.

பெண்கள் வீடுகளில் தனித்து, உறைந்துகிடக்கவேண்டும். வைத்திய சிகிச்சை போன்ற நிர்பந்தம் நேரிட்டால், (அதுவும் ஏழைப் பெண்கள் மட்டும்), இரவிலும், அதிலும் இருள் நிறைந்துள்ள சமயத்தில் அழுக்காடை உடுத்து, தைப்பட்டியும் முகமூடியும் அணிந்து, கிழவி போலும் 'குரல் தெரியாமலும், ஒரு நகரும் பார்ஸல் அல்லது கூடாரம் போல்,

வீட்டுச் சுவர்களில் உராய்ந்துகொண்டு போகவேண்டுமென்பதற்கு ப. பி. நூலில் காட்டப்பட்ட ஆதாரங்களோட்ட ... கேட்கின்றீர்களா. இதுபற்றிய விபரம் நான் வெளியிட்டு வரும் 'ஹதீஸ் விளக்கத்தில்' காணலாம். இதைப்பற்றி இங்கு விளக்குவதானால் பெரிய கிரந்தமாகிவிடும். அதையெல்லாம் சேர்த்து அச்சிட்டு வெளியிட வசதி இல்லை மேலும் அவை எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு அவசியமேயில்லை. குர்ஆனுக்குப் பொருந்தாத ஹதீஸ்களை ஹதீஸாகக் கருத வேண்டாமென்ற சந்தேகமற்ற ஹதீஸின்படி இவைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையென்று முன்னரே பல தடவை விளக்கியிருக்கின்றேன்.

'குருடரையும் பெண்கள் பார்க்கக் கூடாது',
'வீட்டு சந்து பொந்துகளையெல்லாம் அடைத்து வைக்கவேண்டும், பெண்கள் வெளியே பார்த்துவிடாதபடி',
'ஜன்னல் வழியாகப் பார்த்த தன் மனைவியை -- அடித்தார்கள்',
'தொழுகைக்கு மசூதிக்கு வந்த பெண்களைக் கற்களைக் கொண்டு அடித்தார்கள்',
'இரவில் இருளில் தான் குரல் வெளி வராமல் ஒரு உருவம் போல் போகவேண்டும்'.
'பெண்களுக்கு டாம்பீக உடை கொடுக்கக்கூடாது',

என்பன போன்றவை பர்தாவின் அவசியத்துக்கான ஆதாரங்களாக ஏற்றுக்கொண்டால், இவைகளை ஆதாரமாகக் காட்டி பர்தாவின் அவசியத்தை நிரூபிக்க முயன்றவரின் வீட்டாரின் பெண்கள் உயிருடன் இருந்திருக்க முடியுமா வென்று சிந்தித்துப் பாருங்கள்.

இவைகள் சரியான ஹதீதுகள் என்றால், நாம் அதன்படி நடக்கக் கட்டுப்பட்டுள்ளோம். இந்நிலையில், நம் வீடுகளிலுள்ள ஜன்னல்களை அடைத்துவிட வேண்டும். நம் பெண்களை அடித்தவண்ணமாயிருக்கவேண்டும். அவர்களுக்கு விபச்சாரக் குற்றம் சாட்டிப் பலதடவை தண்டித்திருக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்கின்றோமா? இப்படிச் செய்து வந்திருந்தால் முஸ்லிம் பெண் இனமே இல்லாமல் நசித்துப்போயிருக்குமல்லவா?

ப. பீ. த்தில் விவரித்தபடி, நம் பெண்கள் பர்தாவை அனுஷ்டிக்கின்றனரா? அனுஷ்டிக்க முடியுமா? இல்லை, முடியாது, முக்காலும் முடியாது.

என்றாலும் ப. பி. நூலாசிரியர்,

"தொன்று தொட்டு முஸ்லிம் அரசர் முதல் ஆண்டி

வரை கோஷா பர்தா முறையைக் கையாண்டு வருகிறார்களெ ன்பது உலகறிந்த உண்மையாகும்"

என்று வெகு துணிச்சலாக எழுதி பாமர மக்களை நம்ப வைக்க முயன்றிருக்கின்றார்.

முஸ்லிம் உலகத்திலேயே 90 சத விகிதத்தினர் ஏழைகள். ஏழைகளின் பெண்கள் ஆண்களுடன் வெளியே சென்று புலம் பூமியில் 'கூலி-நாலி' செய்து பிழைத்து வருகின்றனர். நாமே, கொஞ்சம் நிம்மதியாக உள்ளவர்களின் பெண்களே, ப. பி. நூலில் கண்டபடி பர்தாவை 1000 ல் ஒரு பங்களவு கூட அனுஷ்டிக்க முடியாதிருக்கையில், ஏழைப் பெண்களின் கதியென்ன? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா! ஏழைக்கோர் சட்டமா இஸ்லாத்தில்!

மிஸ்ர், பலஸ்த்தீன், ஸிரியா, மக்கா உள்பட ஹிஜாஸ் முதலிய முஸ்லிம் அரசாங்கமுள்ள முஸ்லிம் தேசங்களில் சில வருஷங்கள் வாழ்ந்திருக்கின்றேன். அங்கு ஹஜ் சமயத்திலும் கூட நம் நாட்டில் அனுஷ்டிக்கும் அளவுக்கும் அங்குள்ள பெண்கள் பர்தாவை அனுஷ்டிக்காதலைக் கண்டுள்ளேன்.

அவர்களைக் கேட்டபொழுது, (All nonsense) 'எல்லாம் மடமை', முல்லாக்களின் குறும்பு, ஆணின் ஆதிக்கம், குர் ஆனில் ஆதாரம் இல்லை' என்று சொல்லச் செய்தார்கள். இதன் பேரில்தான் நான் தேசம் திரும்பியவுடன் 'நஞ்சோதரிகள்' விஷயமாக பல பத்திரிகைகள், முக்கியமாக தாருல் இஸ்லாத்தின் மூலியமாகப் பிரச்சாரம் செய்து வந்திருக்கின்றேன், சென்ற 30 வருஷங்களாக.

நூருல் இஸ்லாமின் ஆசிரியர் ஹாபிஸ் முகம்மது ஈசூப் பாகவி அவர்கள் பினாங்கின் தேசநேசன் பத்திரிகையை நடாத்தி வரும்பொழுது, அங்குள்ளவர்களின் விருப்பத்துக் கிணங்கி, அதில் தொடர்ந்து 'நஞ்சோதரிகள்' சம்பந்தமாக எழுதி வெளியாயுள்ள விஷயம், 8 வருஷ விஷயமானாலும், அது பிரஸ்தாபத்திலுள்ள பிரச்னைக்கு அவசியமாகையாலும், இன்றைக்கும் பொருத்தமானதா யிருக்குமாகையாலும், அதிலிருந்தும் நஞ்சோதரிகளைப்பற்றி தெரிந்து கொள்ளலாம்.

அதில்,

(1) நவீன நாகரீகமும்—கோஷாவும்,
(2) கோஷா அவமதிக்கப்பட்டு வருகின்றது,
(3) இதற்கு புருஷர்களே காரணம்,
(4) கோஷாவை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் ஏன்?,

(5) மனைவி நமக்கு பாரமாக இருக்கிறாள், துணைவியா
(6) பாரமாயிருப்பதற்கு ஆண்களே காரணம், [யில்லை,
(7) என் வாழ்வில் ஒரு எதிர்பாரா சம்பவம், [குவதில்லை,
(8) படிக்கப் பழக்கினாலும் பெண்களுக்கு எழுதப் பழக்
(9) நம் பெண்கள் விற்கப்படுகின்றனர்,
(10) நம் பெண்களை நாம் நம்புவதில்லை,
(11) கற்பெனப்படுவதெது?
(12) மார்க்க வரம்புக்குட்பட்ட அன்பு வளர்ச்சி,
(13) தற்பொழுது நடைபெறும் நிக்ஹா முறை;
(14) விவாஹரத்து உரிமையிலிருந்து தெரிவதென்ன?
என்ற பல விஷயங்களைத் தெரிந்துகொள்வீர்கள் [9]

## பலதேச பர்தா முறைகள்

விஷயமிப்படியிருக்க, ப. பி. நூலாசிரியர் மேலும் உண்மையைத் திரித்துக் கூறிக்கொண்டே போகின்றார். மேலும், அவரே ஹதீஸ் தலீல் சட்டங்களை மீறி நடப்பதையே 'உண்மைப் பர்தா' வென்றும் மெச்சுகின்றார்.

## துருக்கியர் பர்தா

"துருக்கியரில் உத்தம ஒழுக்கமுடையகனவான்கள் ஹஜ்ஜுக்காக வரும்பொழுது தங்கள் கோஷாவை மனைவியரின் உடலின் ஒரு பாகங்கூட வெளிக்கு தெரியாவண்ணம் தக்க பர்தா ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள். பகல் காலத்தில் தங்கள் பெண்களை வெளியில் அழைத்து வருவதே கிடையாது. ஹஜ்ஜின் 'தவ்வாப்' முதலியன செய்யவேண்டிய அவசிய காரியத்துக்கு மட்டும் வெளியே அழைத்து வரும்போது தக்க மூழு பர்தாவுடன் அழைத்து வருவார்கள். இத்தகைய உடையிலிருக்கும் பெண்மணி கருப்பா, மங்கையா, கிழவியா என்றுகூட வெளியில் கண்டுபிடிக்க முடியாது".

---

9 இந்நூலுடனே தேசநேசன், சத்தியஇஸ்லாம், தாருல் இஸ்லாம் முதலியவைகளில் வந்தவைகளை, ஆசிரியர்களின் விருப்பு—வெறுப்பு கலந்த குறிப்புகளுடன் தொகுத்துக் கொடுத்தால் பலனேற்படும் என்றிருந்தோம். ஆனால் நம் அச்சகத் தொழிலாள் ஒருவன், 'குலாம்' அவர்கள் 30 வருஷங்களாக சேகரித்து வைத்தவைகளைத் திருடி விற்றுவிட்டதில் பழைய ரிக்கார்டுகளுடன் மேற்படி கட்டுரைகளும் போய்விட்டதால் நம் எண்ணம் பூர்த்தியாகவில்லை. (இ. இ. ப.)

என ப. பி. ப. 46 ல் எழுதுகின்றார். ப. பி. நூல் 1936 வெளியிடப்பட்டிருக்கின்றது. இப்படி ப. பி. நூலாசிரியர் துருக்கியரைப்பற்றி எழுதுவது கற்பனையே யெனலாம். 1920 க்கு முன் ப. பி. ல் விவரித்தபடி துருக்கியர், ப. பி. நூலாசிரியரைப் போன்ற முல்லாக்களின் ஆதிக்கத்திலிருந்த காலத்தில், நடந்துகொண்டிருந்தால் ஆச்சர்யமில்லை. 1920 க்குப் பிறகு அநுஷ்டானத்திலிருந்த குர்ஆனுக்கு விரோதமான கோஷா-பர்தாவை துருக்கியர் பிய்த்து எறிந்துவிட்டனர் என்பதை ப.பி. நூலாசிரியர் அறியாதுபோனது வருந்தத்தக்க விஷயம்.

## அராபிய பர்தா-கோஷா

"— - கிராமாந்திரங்களிலும் நகர் பதிகுகளிலும் வசித்து விவேகம் பெற்றிருந்து வரும் முக்கிய அரபிசுளெல்லாம் தங்கள் பெண்மணிகளை (ெ)க(ா)டுமையான கோஷாவில் தான் வைத்திருக்கின்றனர்; இத்தகைய உத்தமப் பெண்கள் தங்கள் முகங்களை அன்னிய ஆடவர்எவருக்கும் வெளிப்படுத்துவதில்லை; தங்களின் குரலோசையை வெளியில் காட்டுவதில்லை. ஆனால் வேலைகளை முன்னிட்டு அலைந்து திரியும் பெண்கள், வேலைக்காரிகளாகிய அடிமைப் பெண்கள், வருமையினால் வாடும் ஏழைப்பெண்கள், ஆகியவர்களே யாவர். இத்தகையவர்களும் கூட மிகவும் பூர்த்தியான பர்தாவுடன் தான் வெளியேறுகின்றனர். இன்னோர் துப்பட்டிப் போர்வையால் நல்ல விதமாய் உடலை மூடிக்கொண்டே செல்லுகின்றனர். எனவே இவர்களது உடலின் எந்த சிறுபாகமும் வெளிக்குத் தெரியமாட்டாது." என்றும்,

"இன்னோர் வழியைக் கண்டு நடந்து செல்வதற்காக வென்று மட்டும் இருகண்களுக்கும் போர்வையிலுள்ள முகமூடியில் துவாரம் வைத்துக் கொள்வர். இத்துவாரத்தின் வழியாகவே அன்னோர் வழியைப் பார்த்துக்கொண்டு செல்வார்கள், ஆனால் இதர வீண் காக்ஷிகளை அவர்கள் அத்துவாரத்தினால் பார்த்துக்கொண்டு செல்லமாட்டார்கள்."

என்றும் ப. பி, ப. 47 ல் விளக்கியுள்ளார்.

## பத்விகளின் கோஷா

"மேலும் (அரபி) பத்வி வர்க்க கனவான்கள் தங்கள் வீட்டுப் பெண்களை கஅபத்துல்லாவின் ஜியாரத்துக்காக அழைத்து வருவதுண்டு. ஆனால் இன்னோருங்கூட தங்கள் பூரணமான பர்தாவுக்குள் வைத்துக்கொள்கின்றனர். அதா

வது ஒரு பெரிய துப்பட்டியினால் அப்பெண்கள் தங்கள் சரீரத்தை முழுதும் மூடிப் போர்த்துக் கொள்கின்றனர். வெளியில் பார்த்துச் செல்லக்கூட இவர்கள் திறப்பு வைத்துக் கொள்வதில்லை. இன்னோர் குருடர்களைப்போல்தான் பிறரால் கைபிடித்து அழைத்துச் செல்லப்படுவர். இவைகள் தான் அராபிய தேச கோஷா முறையின் உண்மைப் பர்தாவாக இருக்கிறது"

(ப. பி. பக்கம் 47)

என்றெல்லாம் எழுதி, இவைதான் உண்மையும் பூரணமானதுமான இஸ்லாமியப் பர்தா வென்று எடுத்துக்காட்டி யிருக்கின்றார். இப்பொழுது கவனியுங்கள்.

ப. பி. நூலாசிரியரின் வியாக்யானப்படி பூரணமான உண்மைப் பர்தாவை அநுஷ்டிப்பதென்றால்,

1) நாம் பெண்களை பகல்காலத்தில் வெளியில் அழைத்து வருவதே கூடாது.

2) 'ஹஜ்ஜின் 'தவ்வாபு' முதலிய செய்யவேண்டிய அவசிய காரியத்துக்கு மட்டும்' வெளியே அழைத்து வரும் பொழுதும் கூட பெண்ணின் ஒரு சிறு பாகங்கூட, இவள் கருப்பா, மங்கையா, கிழவியா என்று கூட வெளியில் கண்டுபிடிக்க முடியாதவாறு கொண்டுவரவேண்டும்.

3) பெண்கள் வெளியில் ஹஜ் போன்ற பர்ஜான அவசிய காரியத்துக்குப் போக நேரிடும் பொழுதுகூட பெரிய துப்பட்டியினால் போர்த்தி குருடர்களைப்போல் தான் அழைத்துச் செல்லப்படவேண்டும்.

இது போன்ற கோஷா முறை ஆங்காங்கே ஒரு சிலரால் அநுஷ்டிக்கப்பட்டு வருவதை நான் மறுக்கவில்லை.

நான் அராபியர்களிடையில் அவர்கள் தேசங்களின் சில காலம் வசித்துள்ளேன். ப. பி. நூலில் வர்ணிக்கப்பட்டது மிகைப்பட்டதானாலும், ஏறக்குறைய இதுபோன்ற கொடுமை, பழக்கவழக்கத்தை ஒட்டி, இஸ்லாத்தின் பெயரால், ஆங்காங்கே நடக்கத்தான் செய்கின்றது. கேள்வி யெல்லாம் இப்பழக்க வழக்கங்களுக்கும் குர்ஆனுக்கு—அதாவது இஸ்லாத்துக்கும் சம்பந்தமுண்டா வென்பதே. மேலும், இவைகள் தானா உண்மையான—தகுந்த—முழு—பூரணமான கோஷா முறை யென்பதில் தான் பிணக்கு.

கோஷாவுக்கான குர்ஆன் பிரமாணங்களிலிருந்து இவையனைத்தும் குர்ஆன் கூறும் கோஷா அல்லவென்று முன்னரே தெரிந்துகொண்டிருக்கின்றீர்கள். என்றாலும், ப. பி. ல் கோஷா வென்று விவரிக்கப்பட்டவனைத்தும் தொன்று தொட்டு வரும், கடுமையான, அல்ல, கொடுமையான ஆணின் ஆதிக்கம், எமா

ற்றத்தந்திரம், பழக்க வழக்கம், மூட நம்பிக்கை, அநாகரீகம் என்று தான் கொள்ளவேண்டும். ப. பி. நூலாசிரியர் க்காட்டியவை இஸ்லாமிய சட்டப்படி முஸ்லிம்களா லை அநுஷ்டிக்கும் உண்மை கோஷா முறையென்றால், இன்றைக்குப்பட்டதல்ல, குர்ஆன் சட்டம் ஏற்படு முன்பும், அரபியர்களிடையிலும், கிரேக்கர், ரோமர், பர்ஷியர்கள், ஏகிப்தியர், இந்தியர், முதலிய அனைவரிடையேயும் கௌரவத்தின் பெயரால் ப. பி. நூலாசிரியர் விளக்கிக் காட்டிய 'உண்மை கோஷா' அநுஷ்டிக்கப்பட்டு வந்ததாக சரித்திரங்கள் கூறிக்கொண்டே இருக்கின்றன.

இதை நிரூபிக்க ஒரு உதாஹரணம் போதுமானது. ராமாயணம் பல்லாயிர வருஷங்களுக்கு முன் நடந்ததாக சொல்லப்படும் நம் நாட்டு சம்பவம் என்பதை மௌலவி சாஹிப் மறக்கவே முடியாது. கம்பர் 1500 வருஷங்களுக்கு முன்தோன்றிய கவி யென்பதையும் மறக்கமாட்டார். இஸ்லாத்துக்கு முன், குறைந்தது முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வருமுன் தான் கம்பராமாயணம் எழுதப்பட்டிருக்கவேண்டும். ப. பி. நூலாசிரியர் வர்ணிக்கும் பூரணமும் உண்மையுமான கோஷாவைவிட வெகு கடினமான கோஷா முறையை 'சீதா-தல்லி' அநுஷ்டித்ததாக வர்ணிக்கின்றார். சூரிய சந்திரர்களும்கூட சீதாபிராட்டியை, அவர் ராமனை சந்திக்கு முன், பார்க்கமுடியாதபடி கோஷா-பர்தா முறையை அவர் அநுஷ்டித்து வந்ததாக வர்ணித்துள்ளாரென்றால், ப. பி. நூலாசிரியர் வர்ணிக்கும் கோஷா குர்ஆன் தோன்றிய காலத்துக்கு பல்லாயிர வருஷங்களுக்கு முன்பிருந்தே அநுஷ்டானத்திலிருந்து வருவதாக ஏற்படுகின்றதல்லவா!

இன்றைக்குங்கூட அடிக்கடி ஸென்ட்ரல் ஸ்டேஷன் போன்ற ரயில் சந்திப்புகளில் கவனிக்கலாம், குருடரைப் போல அல்ல, நகரும் கூடாரத்திற்குள்ளிருந்து கொண்டு முஸ்லிமல்லா பெண்கள் நகர்ந்துகொண்டு போவதை.

40 வருஷங்களுக்கு முன் நான் சிறுவனாக இருக்கையில் வெள்ளச்சிகள் கூட முகமூடியுடன் மட்டுமல்ல, கை கால் விரல் நகங்கள்கூட தெரியாதபடி உடுத்திக்கொண்டு வருவதை சகஜமாகப் பார்த்ததுண்டு.[10]

இவர்கள் எல்லாம் முஸ்லிம்களைப் பார்த்து, அதாவது இஸ்லாமிய கட்டளையை ஏற்று இஸ்லாமிய கோஷாவை

---

10 அதிகதூரம் போவானேன். என் மனைவியை நான் திருத்தமுடியவில்லை. அவர் வெளியில் செல்லுவதில்லை, அவசிய அவசர காரியத்துக்கும். மாடியிலிருந்து இறங்கித் தன் தோட்டத்துக்குப் போவதே அவருடைய கோஷா முறைக்

அனுஷ்டிக்கின்றார்கள், அனுஷ்டிக்தார்கள் என்று யாரும் கயிறு திரித்தால் அவனை என்னென்பீர்கள்?

'ஹஜ் காலத்தில் முகமூடி கூடாது'

என்ற ரசூலவர்களின் கட்டளை என்னவாயிற்று, குருடர்களைப்போல, போர்வை போர்த்தி இன்னதென்று தெரிந்து கொள்ள முடியாத உருவம் போல நம் பெண்களை ஹஜ்ஜின் 'தவ்வாபு' முதலிய (பர்ஜாகிய) அவசிய காரியத்துக்கு இட்டுச் செல்வதுதான் உத்தம ஒழுக்கமான பூரண உண்மையான கோஷா முறை யென்றால்'!! நிற்க.

---

குக் குர்தகமாகி விடுவதாக நினைக்கின்றார். இடையூறாக இருப்பது பழக்க வழக்கம். இதன் பலனாக கால்களில் வீக்கம் ஏற்படும் அளவுக்கு சோம்பேறித்தனம்! சோம்பேறிகளுக்கு கோஷா பழக்கம் உதவியாக இருக்கின்றது. வெளியூர்களிலிருக்கையில் ஒரு அளவுக்கு என்னுடன் ஒத்துழைத்து வந்தாலும், உள்ளூருக்கு வந்தபிறகு குடும்ப கௌரவம், பிறவிப் பிடிவாதம், ஊர் பழக்க வழக்கம் என்பவை புருஷனுடைய விருப்பத்தையே, இஸ்லாமியக் கட்டளைகளையே அலட்சியம் செய்யச் செய்கின்றது. இதனால், இந்தப் பொய்யான கௌரவத்தாலும், மூட நம்பிக்கையுடன் கூடிய பழக்க வழக்கத்தாலும் என் மனைவி எனக்கு உதவியாக இருப்பது போய், இருக்கவேண்டியது போய், சகித்துக்கொண்டிருக்க வேண்டிய ஒரு பெரும் பாரமாய் இருக்கின்றார். இவருடன் இது நின்றாலாவது பரவாயில்லையே! குழந்தைகளும் வாழையடி வாழையாக வளர்கின்றனர். குழந்தைகளை என் இஷ்டத்துக்குப் பழக்க முடிவதில்லை. தாயைப் போலத் தானே பிள்ளைகள்! கசப்பையும் வெறுப்பையும் சகித்துக் கொண்டு என் பெண் மக்கள் இஸ்லாத்தை ஒட்டி வளர்ந்து வரமுயலுகின்றேன். மனைவியின் ஒத்துழைப்பு இல்லாததினால் வெற்றி காண்பேனா என்பது என்னவோ சந்தேகந்தான். என் மனைவியின் மூட நம்பிக்கையாலும், தீமையைப் பயக்கும் பிடிவாத குணத்தாலும், உள்ளுணர வேண்டியதற்கவசியமான நிதான புத்திபற்ற அறிவாளிகளில் அவசரக் குடுக்கைகளின் தாக்குதலுக்கு நான் அடிக்கடி ஆளாவதுமுண்டு. 'அநுஷ்டானத்திலுள்ள கோஷா—பர்தா கூடாது. அது இஸ்லாத்துக்குப் புறம்பானது என்று தீவிரப் பிரச்சாரம் செய்யும் நீங்கள் உங்கள் மனைவியை வீடடங்கிக் கிடக்கும்படி செய்திருக்கின்றீர்களே! — — -' என்றெல்லாம் கேட்ட வண்ணமாகத்தான் இருக்கின்றனர். என்ன செய்வது! இவர்களை சமாதானப்படுத்துவது எனக்கு ஒரு ப்ரச்னையாக இருக்கின்றது.

## குர் ஆன் 33 : 30, 31, 32, 53

முதலிய வாக்கியங்களும் பர்தாப் பிரமாணங்களாக ப. பி. ல் எடுத்தாளப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லின், இக்குர் ஆன் வாக்கியங்களுக்கும் பெண்கள் வீட்டை விட்டுக் கிளம்பலாமா, அவர்களுக்கு முகமூடி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதா வெனும் கோஷாப் பிரச்னைக்கும் நேரிடையான சம்பந்தம் கிடையாது.

### குர்ஆன் 33 : 53

"நீங்கள் ஸ்திரீகளிடத்லிருந்து யாதாமொரு பொருளைக் கேட்கவேண்டுமாயின், திரைக்கப்பாலிருந்து கேளுங்கள். இஃது உங்கள் ஹிருதயங்களைப் பரிசுத்தமாயிருக்கச் செய்யும்"

என்று ப. பி. ப. 2 ல், குர் ஆன் 33 : 53 வது வாக்கியம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த மொழி பெயர்ப்பு சரியானதல்ல. சரியான, நேர்மையான, உண்மையான மொழி பெயர்புப்படி 'ஸ்திரீகள்' என்ற இடத்தில் 'நபியுடைய மனைவிகள்' என்றிக்கவேண்டும்.

இந்த வாக்கியம் இறுதிநபியவர்களின் மனைவிகளுக்கும், நபியவர்களுடன் அவருடைய தோழர்கள் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்க முறைகளைப் பற்றியும் உபதேசிப்பதாகும். உண்மை இப்படி இருக்க, ப. பி. நூலாசிரியர் குர்ஆனையேத் திரித்துவிட முயன்றிருக்கின்றார். இது மன்னிக்கமுடியாத குற்றமாகும். இ. ந. யவர்களுடைய மனைவிகளுக்கான உபதேசம் இ. ந. களைப் பின்பற்றும் அனைவருக்கும் பொருந்தும் என்பது வேறு விஷயம்; குர்ஆனைத் திரித்து மொழி பெயர்ப்பது பெரிய குற்றமேயாகும். (நம் ஆலிம்கள், அவர்கள் தாங்கள்தான் இ. ந. களின் வாரிஸுகளும், இஸ்லாத்தின் தூண்களும் என்று நினைத்துக் கொண்டிருப்பதாலும், இதை, இக்கற்பனைக் கதையை உண்மையென்று படித்தறிவு பெற்ற முஸ்லிம்களும் நம்பிக் கொண்டிருப்பதாலும் தான் இவர்கள் குர்ஆனையும், இ. ந. ன் சொல் செயல்களையும் தங்களிஷ்டத்துக்கு திரித்துக் கூறத் துணிந்துவிடுகின்றனர்.) பிரஸ்தாபத்திலுள்ள குர் ஆன் உபதேசமெல்லாம் தான்தோன்றித்தனமாய் நடந்துகொள்ளுவதைத் தடுத்து, முஸ்லிமானவர்கள் ஒரு ஒழுங்கு முறையை ஒவ்வோர் விஷயத்திலும் கையாள வேண்டுமென்பதற்காகவே.

ப. பி. ல், நீண்ட 33 : 53 வது வசனத்தின் மத்தியிலுள்ள ஒரு சிறு பகுதியை மட்டும் துண்டித்துக் காட்டி, தன் சொந்த 'கோஷா-பர்தா'வுக்கு ஆதாரந் தேட முயன்றுள்ளார், ப. பி. ஆசிரியர். கீழே கொடுக்கப்பட்டுள்ள 33 : 53

வது சுலோகத்தின் மூழு மொழி பெயர்ப்பிலிருந்து அதில் பொதிந்துள்ள உண்மைகளை விளங்கிக்கொள்ளுவீர்களாக.

"விசுவாசிகளே! (உங்களை உங்களுடைய நபி) விருந்துக்காக (அழைத்திருந்தபோதிலும்) அனுமதியின்றி நபியினுடைய வீட்டினுள் செல்லாதீர்கள். அது தயாராவதை எதிர்பார்த்துத் தாமதித்து இருக்கக்கூடிய விதத்தில் முன்னதாகவும் சென்றுவிடாதீர்கள் (விருந்து தயாரானதன் பின்னரும்) நீங்கள் அழைக்கப்பட்டால் தான் உட்செல்லவும் தவிர நீங்கள் ஆகாரத்தைப் புசித்து விட்டால் உடனே வெளிப்பட்டுவிடுங்கள். (அங்கிருந்துகொண்டே வீண்) பேச்சுக்களை ஆரம்பித்துவிட வேண்டாம். (அவ்வாறு செய்தால்) நிச்சயமாக இது நபிக்கு பெரும் வருத்தத்தை யளிக்கும். (இதனை) உங்களிடம் (கூற) அவர் வெட்கப்படலாம்; எனினும் உண்மையைச் சொல்ல அல்லாஹ் வெட்கப்படமாட்டான். நபியுடைய மனைவிகளிடம் யாதொரு பொருளை நீங்கள் கேட்(கும்படி நேரிட்)டால் (நீங்கள்) திரை மறைவிலிருந்துகொண்டே அவர்களிடம் கேளுங்கள். இது உங்கள் இருதயங்களையும் அவர்கள் இருதயங்களையும் பரிசுத்தமாக்கி வைக்கும். அல்லாஹ்வினுடைய தூதரை நீங்கள் துன்புறுத்துவது உங்களுக்குத் தகுமானதல்ல. அன்றி அவருடைய மனைவிகளை, அவருக்குப் பின்னர், ஒரு காலத்திலும் நீங்கள் விவாகம் செய்துகொள்வதும் கூடாது. நிச்சயமாக இது அல்லாஹ்வினிடத்தில் மிக்க மகத்தான (பாபமான) காரிமாகும்."

என்பது குர்ஆன் 33 : 53 க்கு 'த. கு.' (தர்ஜுமதுல் குர்ஆனி)ன் மொழி பெயர்ப்பாகும்.[11]

---

11 தர்ஜுமதுல் குர்ஆனில் பழமையே, பழய நம்பிக்கைகளே மலிந்திருந்தாலும், மொழி பெயர்ப்பில் ஆங்காங்கே பிழைகளைக் கண்டாலும், பூர்ணமான குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு இது ஒன்றே ஆகும். வெகு சிரமப்பட்டு மொழி பெயர்த்து இதைத் தந்த மௌலானா மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி சாஹிப் அவர்களுக்கு தமிழர்கள், முக்கியமாக தமிழ் முஸ்லிம்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். சென்ற 40—50 வருஷங்களாகப் பலர், பல ஸ்தாபனங்கள், முயற்சித்தும் முடியாத மாபெரும் வேலையை இப்பெரியார் செய்துமுடித்திருக்கின்றார். மௌலானா பா. தா, (B. A.,) அவர்களின் மொழி பெயர்ப்பு முடிந்து வருஷங்கள் பல ஆகியும், அது வெளி வராதிருக்கையில் த. கு. வைத்தான் கையாள வேண்டியிருக்கின்றது.
(இ. இ. ப.)

## குர்ஆன் 33 : 33

33 : 33 ஐக்கூட 33 : 53 ஐத் திரித்துக் கூறியதை ஒட்டியே திரித்து மொழி பெயர்த்து ப. பி. ல் அதை அடிக்கடிக் கையாண்டுள்ளார். ப. பி ன் மொழி பெயர்ப்பாவது:—

"மாதர்களே! நீங்கள் இல்லங்களில் தனித்திருங்கள்! முந்திய மூட நாட்களில் நடந்து கொண்டதே போல் உங்கள் வனப்பைக் காண்பித்துத் திரியாதீர்கள்" என்பதே.

இதையே 'தர்ஜுமதுல் குர்ஆனி'ல்,

"(நபியுடைய மனைவிகளே!) நீங்கள் உங்கள் (வீடுகளிலிருந்து வெளிச்சென்று திரியாது) வீடுகளுக்குள்ளாகவே தங்கி இருங்கள். முன்னிருந்த அறியாத ஜனங்கள் (தங்களை அலங்கரித்துக்கொண்டு வெளியில் சென்று) திரிந்துகொண்டிருப்பதைப்போல் நீங்களும் திரியாதீர்கள். தொழுகையைக் கடைப்பிடித் தொழுகுங்கள்; ஜகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடங்கள். (நபியுடைய) வீட்டுடையார்களே! உங்களைவிட்டு சகல அசுத்தங்களையும் நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கி விடவே அல்லாஹ் விரும்புகின்றான்."

என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. குர்ஆன் தடுப்பதெல்லாம், 'கண்ணையும் மனதையும் கவரும் முறையில் வேசிகளைப்போலும், பெரும்பாலான சினிமா நடிகைகளைப் போலவும் ஆண்களின் காமத்தைக் கிளரும் முறையில் அலங்கரித்துக்கொண்டும் பகட்டிக்கொண்டும் வெளியில் சென்று திரிந்தலைந்து கொண்டிருக்கவேண்டாம். அலங்கரிப்பு, அழகெல்லாம் அவைகளை அநுபவிக்க உரிமை உள்ள அவரவர்களின் கணவன்மார்களுக்கே உரித்தாகட்டும்' என்பதே தவிர்த்துப் பெண்கள் வீடடங்கியேக் கிடக்கவேண்டுமென்றோ, வெளியில் செல்லலாகாதென்றோ நினைப்பதற்குச் சிஞ்சிற்றுமிடமில்லை.

குர்ஆன் 33 : 30, 31, 32, இவைகளில் வரும் உபதேசங்களும், எச்சரிக்கைகளும் இ. ந. ன் மனைவிமார்களுக்கென்றே உள்ளன. மேலும், இவைகளுக்கும் பிரச்னையிலுள்ள கோஷா—பர்தா—முகமூடிக்கும் மறைமுகமான சம்பந்தமுமில்லாதிருக்க, இவ்வாக்கியங்களையும் ப. பி. ல் நுழைத்து விஷயத்தைக் குழப்பியுள்ளார், ப. பி. நூலாசிரியர்.

## குர்ஆன் 33 : 30

ப. பி. ப. 30 ல் கண்டபடி:—

"நபியின் பத்தினிமார்களே! உங்களில் எவரேனும் ஒரு

வர் பகிரங்கமாக கெட்ட நடத்தையில் ஈடுபடுவீராயின்
அப்படிப்பட்டவருக்கு இரட்டிப்பான தண்டனை வேத
னை யிருக்கின்றது. இக்காரியம் ஆண்டவன் விஷயத்தில்
மிக மிக இலேசானதாகும் நீங்கள் நபியுடைய பெண்
டிர்களாயிருப்பதானது தண்டனையை விட்டு தப்பித்து
வைக்கமாட்டாது.”

'தர்ஜுமதுல் குர்ஆன்'படி,
“நபியுடைய மனைவிகளே! உங்களில் எவளேனும் பகி
ரங்கமான யாதொரு மானக்கேடான காரியத்தைச்
செய்வாளாயின் அதற்குறிய தண்டனையை அவர்களுக்
கு இருமடங்காக அதிகரிக்கப்படும். இது அல்லாஹ்
வுக்கு மிக்க சுலபமானதே!”

## குர்ஆன் 33 : 31

ப. பி. ப 30 ல் வந்துள்ளபடி,
“மேலும் உங்களில் எவரேனுமொருவர் அல்லாஹ்வுக்
கும், ரஸூலுக்கும் வழிப்பட்டு நடந்து நற்காரியத்
தைப் புரிவாரானால் இரட்டிப்பான நன்மையிருக்கிறது.
நாம் இதற்குரிய நற்பிரதிபலனை இறுதிநாளில் அளிப்
போம்.”

“தர்ஜுமதுல் குர்ஆன்'படி,
“உங்களில் எவளேனும் அல்லாஹ்வுக்கும், அவனுடை
ய தூதருக்கும் வழிப்பட்டு நற்கருமங்களைச் செய்தால்,
அதற்குரிய கூலியை அவளுக்கு நாம் இருமடங்காகத்
தருவோம். அன்றி மிக்க கண்ணியமான ஆகாரத்தை
யும் அவளுக்கு நாம் சித்தப்படுத்தி வைத்திருக்கின்
றோம்.”

## குர்ஆன் 33 : 32

ப. பி. ப. 31 ல், இதை
“நீங்கள் மற்றப் பெண்களில் ஒருவரைப் போலிருக்க
வில்லை.”
“நீங்கள் ஆண்டவனுடைய தண்டனைக்கு பயந்து தக்வா
வுடன் நடந்துகொள்ள விரும்புவீர்களானால், நேரிலுள்ள
ஆடவர்களின் மனத்தில் பித்னாவோ, இச்சையோ ஏற்படு
ம் முறையில் சம்பாஷணை புரியாதீர்கள்”
என்று மொழிபெயர்த்திருக்க, அதே ஆயத்தை 'தர்ஜுமதுல் குர்ஆன்',
“நபியுடைய மனைவிகளே! நீங்கள் மற்ற (சாதாரண)
பெண்களைப் போலன்று. நீங்கள் அல்லாஹ்வுக்குப் பய
ப்பட்டவர்களாயின் (அந்நியருடன் பேசும் சமயத்தில்)

ஈனமாக பேசாதீர்கள். ஏனென்றால், எவருடைய இருதயங்களில் (பாப) நோய் இருக்கின்றதோ அவர்கள் (தவறான) விருப்பங்களைக் கொள்ளக் கூடும். நீங்கள் (எதைக் கூறியபோதிலும்) யதார்த்தவாதிகளைப்போல் (கண்டிப்பாகப்) பேசிவிடுவ்கள்.

என்று மொழி பெயர்த்துள்ளது."

மேலே கண்ட குர்ஆன் வாக்கியங்களின் மொழி பெயர்ப்புகளில் உள்ள வித்தியாசங்கள் ஒரு புறமிருக்க, 'பர்தா-கோஷா-முகமூடி' பிரச்னைக்கும் இவைகளுக்கும் சம்பந்தமில்லை யென்பதைக் காணலாம்.

## பர்தா-கோஷா-முகமூடி

இவைகளுக்கு ஆக குர்ஆனில் காணும் நேரிடையான பிரமாணங்களெல்லாம 24 : 31 & 33 : 59 இவைகளே. இவைகளைப்பற்றி விபரமாக முன்னரே பரிசிலனை செய்யப்பட்டுள்ளது.

## குர்ஆன் 24 : 31

பர்தா-கோஷா-முகமூடி இவைகளுக் கடிப்படையான குர்ஆன் 24 : 31 ஐ ப. பி. ப. 5 ல்,

> "மூமினான ஸ்திரீகள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்தும் படியும், மர்மஸ்தானங்களைக் காத்துக்கொள்ளும்படியும் நீர் அவர்களுக்குச் சொல்வீராக"

என்று எழுதி, இந்த குர்ஆன் வாக்கியம் முடிவடைந்தது போல் காட்டித் தன் கதையை அளந்திருக்கின்றார் ப. பி. ஆசிரியர். இதே ஆயத் தர்ஜுமதுல் குர்ஆனில்,

> "(நபியே!) விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும்: அவர்களும் தங்கள் பார்வையை கீழ் நோக்கியே வைத்து, தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். அன்றி, தங்கள் தேகத்தில் (பெரும்பாலும்) வெளியில் இருக்கக்கூடியவைகளைத்தவிர தங்கள் (ஆடை ஆபரணம் போன்ற) அலங்காரத்தை வெளிக்காட்டாது மறைத்துக்கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக்கொள்ளவும்.
>
> "பெண்கள் (1) தங்களுடைய கணவர்கள், (2) தங்களுடைய தந்தைகள், (3) தங்களுடைய கணவர்களின் தந்தைகள், (4) தங்களுடைய குமாரர்கள், (5) தங்களுடைய கணவர்களின் குமாரர்கள், (6) தங்களுடைய சகோதரர்கள், (7) தங்களுடைய சகோதரர்களின் குமாரர்கள், (8) தங்களுடைய சகோதரிகளின் குமாரர்கள், அல்லது (9) (முஸ்லிமாகிய) தங்களுடைய இனத்தாரின் பெண்கள், (10) தங்களுடைய அடிமை

கள், அல்லது (11) பெண்களின் விருப்பமற்று தங்களை அண்டி ஜீவிக்கும் ஆண்கள், (12) பெண்களின் மறைவான அவயவங்களை அறிந்துகொள்ளாத சிறு பிராயத்தையுடைய (ஆண்) குழந்தைகள், ஆகிய இவர்களைத் தவிர மற்றெவருக்கும் (தாங்கள் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்கள் போன்ற) தங்களுடைய அலங்காரத்தை காட்டவேண்டாம். அன்றி தங்களுடைய அலங்காரத்தில் மறைந்திருப்பதை அறிவிக்கும் நோக்கத்துடன், தங்களுடைய கால்களை (பூமியில்) தட்டி நடக்கவேண்டாம். விசுவாசிகளே (இதில் ஏதும் உங்களில் தவறு ஏற்பட்டுவிட்டால்) நீங்கள சித்தி பெறும் பொருட்டு, அல்லாஹ்வின் பக்கமே பாப மன்னிப்பைக் கோரி (உங்கள் மனத்தைத்) திருப்புங்கள்."

என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.[12]

---

12 'பர்தா-கோஷா-முகமூடி' பற்றிய ஆராய்ச்சியில், முஸ்லிம் உலகத்துக்கே மார்க்க விஷயத்தில் வழிகாட்டியாக உள்ள எகிப்து எனப்படும் மிஸ்ரிலுள்ள ஆயிர வருஷத்து அஜ்ஹர் சர்வகலா சங்க மதத் தலைவர்கள் மேற்படி 24:31 வது வசனம் ஒன்றைத்தான் எடுத்துக் கையாண்டுத் தங்கள் தீர்ப்பை சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். இத்தீர்ப்பு 24-11-51 திய லாகூர் லைட் பத்திரிகையில் ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளதை சென்னை 'தாருல் இஸ்லாம்' மொழி பெயர்த்துள்ளது. அதன்படி இவ்வாக்கிய(த்தில் சம்பந்தமுள்ள முன் பகுதி மட்டு)ம்

"இன்னம் நீர், ஈமான் கொண்டுள்ள பெண்மணிகளுக்குத் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கித் தணித்துக் கொள்ளுமாறும், தங்கள் கற்பைக் காத்துக்கொள்ளுமாறும், தங்கள் அலங்காரங்களை, அவற்றினின்று வெளித்தோன்றுவதை யன்றி, ஒரு பொழுதும் வெளியிலே (பகட்டிக்) காட்டாதிருக்குமாறும். தங்கள் தலைமுக்காடுகளைத் தங்களுடையை மார்பின் மீது (இழுத்துப்) போட்டுக்கொள்ளுமாறும் கூறக்கடவீர்."

என்பதே.

மேற்படி உலகம் ஏற்றுக்கொண்டுள்ள மிஸ்ர் 'ஜாமிஉல் அஜ்ஹர்' 'கோஷா' வென்பதற்குக் கொடுத்துள்ள பத்வா = மார்க்கத்தீர்ப்பு என்னவென்பதை இங்கு எடுத்துக்காட்டி என் பரிசிலனைக்கு ஆதரவு தேடவோ, ப. பி. நூலுக்கு எதிர்ப்பை அதிகப்படுத்தவோ விருப்பமில்லை. பர்தா = கோஷா = முகமூடிக்கு ப. பி. நூலாசிரியர் எடுத்தாண்ட குர்ஆன் பிரமாணங்களைக் கொண்டே 'அனுஷ்டானத்திலுள்ள பர்தா'வுக்

## பகுத்தறிவுக்கேற்றதா இஸ்லாம்?

அடுத்தபடியாக, பெண்கள் பொதுவாகவும், முஸ்லிம் பெண்கள் முக்கியமாகவும் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், எப்படி நடந்துகொண்டால் இஸ்லாம் அதாவது குர் ஆன் கட்டளைக் கிணங்கியதாக இருக்கும் என்பதைப்பற்றி கவனிப்போம். இஸ்லாம் முழுக்க முழுக்க பகுத்தறிவுக்கு, அதாவது இயற்கைக் கொட்டியதென்று கூறப்படுவது உண்மையாவென்பதை பெண்களை அது எப்படி நடத்துகின்றது என்பதிலிருந்து நிர்ணயிக்கலாம். முஸ்லிம் பெண்கள் இப்பொழுது நடாத்தப்படும் முறையிலிருந்து இஸ்லாம் இழிவுக்காளாகின்றது என்பதில் சந்தேகமே இல்லை. 'பர்தா பிரமாணம்' இஸ்லாத்தை இழிவுபடுத்திவிட்டது. இந்த இழிவை, உண்மையை உள்ளபடி எடுத்துக்காட்டினாலொழிய நீக்கமுடியாது. ஒருவாறு நான் இந்த வேலையை வெற்றிகரமாகவே செய்து இருப்பதாக நினைக்கின்றேன். என்றாலும், இன்னமும் விளக்கவேண்டியிருக்கின்றது. மேற்கொண்டு விளக்கும்பொழுது, குற்றங் குறைகண்டு எழுதுபவர்களுக்கும் இடமளித்து, குறைகளை நிவர்த்தி செய்யப்படும்.

இஷாத்தித இஸ்லாம் பதிப்பகத்திலேயே 'பகுத்தறிவுப் பயிற்சிப் பண்ணை' யென்றுமொன் றுண்டு. பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்டே இப்பண்ணை எதையும் அலசிப் பார்க்கும். இந்தப் பண்ணை 'பெண்கள்' சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளதைக் கொண்டு இஸ்லாம் பகுத்தறிவுக்கு ஆதாரவாக இருக்கின்றதா வென்று அடுத்தபடியாக கவனிக்கப்படும்.

### முஸ்லிம் ஆலிம்களின் கடமை

இந்நூலிலும், இதர இ. இ. வெளியீடுகளிலும், குறை காண்பவர்கள் அவைகளை நிர்தாட்க்ஷண்யமாக, இஸ்லாத்தின் பரிசுத்தத் தன்மையைக் காக்க, எடுத்துக்காட்ட—முஸ்லிம்களும், முக்கியமாக மூஸ்லிம சாஸ்திரிகளும்-கடமைப்பட்டுள்ளனர். இப்படித் தன் கடமையைச் செய்பவர்களை இ. இ. ப. இரு கரங்களாலும் வரவேற்கின்றது.

---

கோ, அவர் விவரித்துள்ள 'உண்மையான கோஷா'வுக்கோ ஆதாரமில்லை என்றும், அவர் வியாக்யானப்படி கோஷா= பர்தா 'பயங்கர அடிமைத்தனம் கூடிய ஜெயில் வாசம்தான்' என்பதையும் நிரூபிப்பதுதான் இந்நூலின் முக்கிய நோக்கமாகையால், அடுத்த வெளியீட்டில், 'அல் அஜ்ஹர்'ரின் பத்வாவை தொகுத்துக்கொடுத்து 'இஸ்லாத்தின் கோஷா' வென்னவென்பது விளக்கப்படும்.

## முஸ்லீம் பெண்களுக்குமோர் வேண்டுகோள்.

இந்த வெளியீடு அச்சாகி முடியும் தருவாயில் (மதுரை) அகில இந்திய முஸ்லிம் மாதர் முன்னேற்றக் கழகத்திலிருந்து ஒரு அழைப்பு கிடைத்தது. இந்த அழைப்பைப் பயன்படுத்திக்கொண்டு கீழ்கண்ட வேண்டுகோள் ஒன்று முஸ்லிம் பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் அகில இந்திய முஸ்லிம் பெண் தலைவிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்தலைவிகள் எப்படித் தங்கள் கடமையைச் செய்தனர் என்பது, இன்ஷா அல்லா, அடுத்த வெளியீட்டில் காண்பீர்கள். அவர்களுக்கு எழுதிய கடிதமாவது:—

25—4—52

இஸ்லாமிய சோதரிகள்,

1) அகில இந்திய முஸ்லிம் மாதர் முன்னேற்றக் கழகத் தலைவர், ஜைனப் பேகம் சாஹிபா,

(2) ஷை கழகச் செயலாளர், K. கமருன்னிஸா ஸாஹிபா (B.A.),

(3) கோயமுத்தூர் குர்ஷித் பேகம் ஸாஹிபா, (B.A., B.T),

(4) மதுரை தமிழ்ப் பண்டிதை (நவ்முஸ்லிம்) ஏ. ஜைனப் பீபீ சாஹிபா,

(5) நீலகிரி, மஹபூப் பேகம் ஸாஹிபா,

அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்.

நஞ்சோதரிகளின் கோஷா-பர்தா சம்பந்தமாக நான் பல வருஷங்களுக்கு முன் ஆராய்ச்சி செய்து எழுதியதை அச்சடித்துக் கொண்டிருக்கையில், எதிர்பாராவண்ணம், சோதரி ஜைனப் பேகம் சாஹிபா அவர்களின் தலைமையில், புதுக்கோட்டையைச் சேர்ந்த அன்னவாசலில் 2, 3 & 4-5-52 தேதிகளில் நடக்க இருக்கும் 'புதுக்கோட்டை பிராந்திய முஸ்லிம் மாதர் முன்னேற்றக் கழக முதலாவது மகாநாடு' அமைப்பாளரிடமிருந்து 'ஆசியனுப்பி அருள்க' என்ற கைக் குறிப்புடன் நேற்று கிடைத்த 'அன்பழைப்பு' தாள்களில், மேலே குறிக்கப்பட்டுள்ள உங்கள் ஐவரின் பெயர்களைக் கண்டதால், உங்களை இப்பஹிரங்கக் கடித மூலியமாக வேண்டிக்கொள்வதாவது. தமிழ் அழைப்பிதழின் 4 வது பக்கத்தில், 'முக்கியவேண்டுகோளி'ல் 2 வதாக,

> "எல்லா முஸ்லிம் பெண்மணிகளும் பர்தா என்னும் பூர்ண கோஷா முறையுடனே வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்"

என்று வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

## "பர்தா என்னும் பூரண கோஷா முறை"

என்ன வென்பதை நான்

1) "முஸ்லிம் பெண்கன் விபசார தோஷமுள்ள அடிமைகள் தானா?" — —
2) "காதல் மணம்" இதை குர்ஆன் தடுக்கின்றதா?"
3) 'கோஷா-பர்தா முகமூடி" இதற்கு குர்ஆன் ஆதாரமுண்டா?"
4) "கோஷா-பர்தா" என்றால் பயங்கர அடிமைத்தனம் கூடிய ஜெயில் வாசம் தானா?"

என்னும் இஷாத்தே இஸ்லாம் வெளியீடுகளில், (முறையே இ. இ. வெ. 22, 43, 46, 47 ல்,) குர்ஆன் ஆதாரங்கள் கொண்டு விளக்கியுள்ளதை உங்கள் மகாநாட்டில் பரிசீலனை செய்யவேண்டுவதுடன், என் பரிசீலனையும், முடிவுகளும் சரியல்லவென்று கண்டால், தக்க குர்ஆன்-ஹதீஸ் ஆதாரங்களுடன், விபரமாக உங்கள் மகாநாட்டின் பரிசீலனையையும் முடிவையும் எனக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேன். உங்கள் மாநாட்டுப் பரிசீலனையும், முடிவும், என் ஆராய்ச்சியும், முடிவும் பிழைபட்டதெனக்கண்டால் என்னைத் திருத்திக்கொண்டு, அதை அச்சிட்டு வெளியிடுகின்றேன். கடைசி வெளியீடாகிய,

"கோஷா-பர்தா என்றால் பயங்கர அடிமைத்தனம் கூடிய ஜெயில் வாசம் தானா?"

என்பது அச்சாகி முடியும் தறுவாயிலுள்ளது. என் வேண்டுகோளின்படி 'பர்தா-கோஷா' சம்பந்தமான உங்கள் மகாநாட்டுப் பரிசீலனை கிடைக்கும்வரை தாமதித்து, அது கிடைத்தவுடன் அதையும் சேர்த்து மேற்படி வெளியீட்டை முடித்து வெளியிட இருக்கின்றேன். இக்கடிதமும், இன்ஷா அல்லா, அதில் இடம் பெறும். நிற்க.

நான், உங்கள் மாநாட்டுக்கு அனுப்பும் 'ஆசி' செய்தியெல்லாம், மேலே குறிக்கப்பட்ட, முஸ்லிம் பெண்கள் சம்பந்தமான 4 இ. இ வெளியீடுகளே. இவைகளில் உங்களுக்கு ஆளுக்கொன்றாக, (4×5) 20 இதழ்கள் இன்று தனித்தபாலில் அனுப்பச் செய்துள்ளேன், இஸ்லாமிய ஆர்வம் உள்ள உங்களூர் B. M. N. ஷரீப் சாஹிப் மூலியமாக. மேற்கொண்டும் அவசியப்பட்டு எழுதினால், இ. அ. கூடுமான வரையில் இனாமாகவே அனுப்பச் செய்கின்றேன்.

உங்கள் விலாச விபரங்கள் எனக்குத் தெரியாததால் இக்கடிதத்தை ஷெ ஷரீப் சாஹிப் மூலியமாகவே அனுப்பி வைக்கின்றேன். வஸ்ஸலாம்.

இ. இ. பதிப்பக சார்பாக, 'குலாம்', 25-4-52.

## முடிவுரை

யாக நூருல் இஸ்லாம் ஆசிரியருக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கவேண்டியதவசியமாகின்றது. 1948 ல் 'பர்தா பிரமாணங்கள்' நூலில் கண்ட பர்தா—கோஷா சம்பந்தமான விதிகளையும், கோஷா அனுஷ்டிக்கும் முறைகளைப் பற்றியும் எடுத்து எழுதி வந்ததை தன் பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள், நூ. இ. ஆசிரியர் ஆனால் 'ப. பி.'த்திலிருந்து இவைகள் எடுத்து எழுதப்படுவதாக மட்டும் நூ. இ. ஆசிரியருக்கு நான் அவர் நேரில் வற்புறுத்திக் கேட்டும் தெரிவிக்கவில்லை. ஏனென்றால், 'மௌலவி அஹமத் ஸயீத் சாஹிப்' வெளியிட்டது 'ப. பி.' என்று அவருக்குத் தெரிந்தால் நூ. இ. ஆசிரியர் என் கட்டுரைகளுக்கு இடந்தரார் என்று எனக்குத் தெரியும். என் கட்டுரைகளில் விவரிக்கப்படும் 'கோஷா'வைக் கண்டித்து, அவையெல்லாம் குர்ஆன் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டவை யென்று தான் சொந்தமாக எதிர்த்து வெளியிடப்போவதாக எனக்குப் பல தடவை உறுதி கூறினார்கள், ஆனால் நடந்ததென்ன! தன் குரு மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிப் எழுதியதைத்தான் நான் தந்திரமாக எடுத்து எழுதி பின் உண்மையை அம்பல படுத்தப்போவதாகத் தெரிந்தவுடன், என் கட்டுரைகளுக்கு மேற்கொண்டு இடங்கொடாததுடன், தான் வாக்களித்தபடி குர்ஆன் கூறும் கோஷாவைப்பற்றியும் எழுதவில்லை, எனக்குத் தெரிந்தவரையில்.

போனதுபோக, நூ. இ. ஆசிரியர், நந்தமிழ்நாட்டில் பெரிய பட்டங்கள் பெற்ற இஸ்லாமிய ஸாஸ்திரிகளில் பத்திரிகை நடத்துதவர் இவர் ஒருவரே ஆகையால், என் ஆராய்ச்சியில் குற்றங்குறை கண்டால், முஸ்லிம்கள் வழி தவறிப் போகாதபடி தன் பத்திரிகை மூலியமாக அவைகளை எடுத்துக்காட்டி என்னைத் திருத்த வேண்டிக்கொள்ளுகின்றேன். செய்வாரா? (செய்யமாட்டார். அவருடைய ரகசியம் எனக்குத்தெரியும்.) செய்தால் தன் கடமையைச் செய்தவராவார். இல்லையேல் கடமையை, வயிற்றுப் பிழைப்புக்காக, புறக்கணித்தவராவார்.

### 'சர்வமும் உண்மையே'

'இ. இ. வெ. யீடுகளில் பெண்கள் சம்பந்தமாய் கூறப்பட்டதனைத்தும் உண்மையே, குர்ஆன்-ஹதீஸுக்கு ஒத்தவையே' என்று கருத்துப்பட எழுதிவிட்டு 'ஆயினும்' என்று B. A. பட்டம் பெற்றவரும், அகில இந்திய முஸ்லிம் மாகர்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் கழகத்தின் செய

லாளருமாகிய ஒரு மாதரசி நம் பதிப்பக 25 தேதிய கடிதத்துக்கு பதிலாக எழுதியுள்ளதை வாசகநேயர்கள் உள்ளுணர்ந்து பார்த்தால், நம் பெண்மணிகளின் அவல நிலை விளங்கும். ஆண்களின், ஆலிம்களெனப்படும் முல்லாக்களின் ஆதிக்கம் நம் பெண் இனத்தினரை இன்னமும் எவ்வளவு அடக்கி ஆண்டு வருகின்றது என்பதை எளிதில் உணரக் கிடக்கின்றது. அவ்வம்மையார் எழுதிய கடிதமாவது:—

From

K. QAMARUNNISA,

89. west Perumal Maistry St.,

Madurai.

அன்புமிக்க சோதர!

அஸ்ஸலாமு அலைக்கும்.

தாங்கள் 25-4-52 தி- மதுரை ஆலி ஜனாப் B. M. H. ஷரீப் சாஹெப் மூலியமாய் அன்புடன் அனுப்பபியருளிய அஞ்சலும், இ. இ. வெளியீடுகள் 4 வகை நூட்களில் 20 பிரதிகளும் கிட்டியன. உங்கள் ஆக்ஞைக்கு இணங்க பெண் சொற்பொழிவாளர்களாகிய ஐவர்களுக்கும் நேரில் கொடுத்து விடுகின்றேன். தாங்கள் கோஷா முறையை அதிகம் கண்டித்து உங்கள் நூட்களில் அமைத்துள்ளீர்கள். சர்வமும் உண்மையே யாயினும், தற்கால நம் நாட்டு நிலைக்கேற்ப, நம் சமூக நிலைக்கேற்ப, நம் புரோகிதர்களின் மனப்பான்மையால் பாமர முஸ்லிம்கள் உள்பட தற்கால மக்கள் அபிப்ராயத்திற்கேற்ப, பெண்களாகிய நாம் பணிந்து நம் காரியாதிகளை தட்டுத்தடுமாற்றமின்றி செவ்வனே நடாத்தி, பெண்மணிகளை முன்னேற்றமடையச் செய்வதே சாலச்சிறந்ததென சாற்றினால் அது மிகையாகாது என்றே நம்புகின்றோம்.

உங்களைப் போலொத்தவர்கள் இன்னும் பலர் இந்திய நாட்டில் இருந்தால் நம் இஸ்லாம் இணையற்ற முன்னேற்றமடையும் என்பதற்கு கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. அல்லாஹ் அருள்புரிவானாக, உங்கள் வெளியீடுகள் அனைத்தும் ஒன்று விடாது எனக்கு அனுப்பிவைத்தால் அது நம் வாசகசாலைக்குப் பெரிதும் பயன் பயக்கும். மற்ற வெளியீடுகளை எதிர்பார்க்கிறேன். வஸ்ஸலாம்,

இப்படிக்கு,

Madurai,
29-4-52.

*K. Qamarunnisa.*

## அன்னவாசலில் என்ன நடந்தது?

அன்னவாசல் மகாநாட்டில் இவ்வெளியீடுகளைப் பற்றி என்ன முடிவு கட்டினார்கள் என்று தெரியவில்லை. முல்லாக்களின் ஆதிக்கத்தைக் கண்டு நடுங்கிக்கொண்டு 'பணிந்து' பணிசெய்து கிடக்கும் தலைவிகளைக்கொண்ட கழகம், முல்லாக்களின் எதிர்ப்பை சமாளிக்கமுடியாதென்று பயந்து இவ்வெளியீடுகளை இருட்டடைப்பு செய்திருந்தால் ஆச்சர்யப்படுவதற்கில்லை. நந்தாய்-சோதரிமார்களின் தர்ம சங்கட நிலையை உணர்ந்து இதுபற்றி அதிகமாக ஒன்றும் விமர்சனம் செய்யவிரும்பவில்லை. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் 'மயிலே மயிலே ——' என்றால் ஆண்களின் ஆதிக்கமும் அக்கிரமும் இந்த நூற்றாண்டிலும் ஒழியாது. நம் பெண்கள் அவர்கள் உள்ள நிலையில் அவர்களிடமிருந்து அதிக உதவியை எதிர்பார்க்காமல், உண்மையை உணர்ந்த முன்னேற்ற ஆர்வமுள்ள வாலிபர்கள் தான் ஏதாவது செய்யத் துணிவுகொள்ள வேண்டும். பா. தா., நூ. இ. இவர்களெல்லாம், ஊருக்கு உபதேசிகளாகத்தான் முடிந்தார்கள். அவர்கள் இத்துறையில் ஒன்றும் வழிகாட்ட முடியாத நிலையில் அவர்களின் குடும்ப வாழ்க்கை இருக்கின்றது. ஆகையால், ஆர்வமுள்ள வாலிபர்கள் துணிவுகொள்ள வேண்டும். அநுஷ்டானத்திலுள்ள கோஷா முறையை ஒழித்து நம் பெண்கள் மேல்தர கல்வி பெற்று ஆண்களுடன் வயிற்றுப்பிழைப்புக்காகப் போட்டியிட்டு, வெளிக்கிளம்பும்பொழுது தங்கள் ஆடை ஆபரண அழகுகளைப் பகட்டிக்காட்டிக் கொண்டிருக்கவேண்டுமென்பதல்ல, நாம் விரும்புவது. நாம் விரும்புவதெல்லாம், குர்ஆன் விரும்பும் முறையில் நம் பெண்கள் வரம்புக்குள்ளடங்கி இருந்துகொண்டு, ஆண்களுக்கு உதவியாக இல்லாவிட்டாலும், பாரமாக — சுமையாக இல்லாமல் இருத்தல் வேண்டுமென்பதே. உதாரணத்துக்காக என் குடும்பத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். பகட்டிக்கொண்டு வெளியில் கிளம்பும் உபாத்தினிகளெல்லாம், தண்ணீர் பஞ்சத்தை சமாளிக்க, இரண்டோர் நாள் அல்லது இரண்டோர் வாரங்களில் பிரசவிக்கும் நாளுக்கான நிலையிலுள்ள கர்ப்பிணிகள்கூட, கிணறு, கிணறுகளாக அலைந்து திரிந்து இரண்டு குடம் தண்ணீரை ஏககாலத்தில் கொண்டு வரக்கூடிய மனவலிவும், உடல் சக்தியும் கொண்டிருப்பதைப்பார்த்து வருகின்றேன்; அதுவும் கொதிக்கும் வெயிலில். இவர்களுடன் ஒப்பிடுகையில், நம் கோஷா பெண்கள் நமக்கு பெரும் பாரமே என்று நான் சொன்னால் கசந்துகொள்ளத்தான் செய்வார்கள். என் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு

வர மாதம் 20 ரூபாய்க்கு மேல் செலவாகின்றது. இது ஒரு சிறு உதாரணம். இவ்வவல நிலைக்கு மூல காரணம் நாம் அநுஷ்டிக்கும் கோஷா அல்லவென்று யாரே எதிர்த்து சொல்லமுடியும். ———. நாம் அநுஷ்டிக்கும் கோஷா ஒழிந்தால் முஸ்லிம் சமூகத்தைப் பிடித்த பீடையில் முக்கால் பாகம் ஒழிந்ததெனலாம்.

இறுதியாகவும் எக்காலத்துக்குமாகவும்,

"எந்த அரசனானாலும் சக்கரவர்த்தியானாலும், அறிவாளியெனக் கியாதி பெற்றவனானாலும், அன்னோர் சூர் ஆன் ஹதீதுகளின் கட்டளைக்கு விரோதமாகக் கூறும் கூற்றுகளையும் செயல்களையும் பின் பற்றாமல் உதறித்தள்ளிவிட வேண்டும் என்பது எம் சன்மார்க்கக் கட்டளையாகும்"

என்று ப. பி. பக்கம் V ல் அதன் ஆசிரியர் மறுக்கமுடியாத ஒரு உண்மையை வன்மையாகக் கூறியுள்ளதை மனத்தில் வைத்து இவ்வெளியீட்டையும் வேறு எந்த விஷயத்தையும் பரிசீலனை செய்து நடந்து கொள்ளுவோமாக. கற்றது கைம் மண்ணளவே. (14-5-52)

---

அடுத்து வரப்போவது

'இஸ்லாமும் ஒழிக்கப்படவேண்டும்'

காரணம்

அதிலும் மூட நம்பிக்கை'

என்று, திராவிடக் கழகத் தலைவர் பஹிரங்கமாக எழுதிவிட்டார் இதை ஒட்டி விடுதலையும் தலையங்கம் எழுதிவிட்டது. இதுவரை இஸ்லாத்தின் பெயரைக் குறிக்காமல் மதங்கள்—கடவுள்கள் என்று 'கூட்டத்தில் கோவிந்தா' என்ற முறையில் கோழைத்தனமாக இஸ்லாத்தையும் மனதில் வைத்து எழுதியும் பேசியும் வந்ததை உள்ளுணர்ந்து, இ. இ. வெளியீடுகள் மூலியமாக பெரியாருக்கு சவால் விடுத்து வந்தோம். இப்பொழுது பஹிரங்கமாக இஸ்லாத்தையும் ஒழித்துக் கட்டுவதாக எதிர் சவால் விட்டு விட்டார். இப்பொழுது என்ன செய்யவேண்டும், செய்யப்போகின்றீர்கள்?

சிந்தித்து யோசனை கூறுங்கள் 'முஸ்லிம்' - 'இஸ்லாம்' பெயர் தாங்கிய பத்திரிகைகளில் சில பெரியாரை ஆதரித்து வந்தன. இவர்களை நெருக்கிப் பிடித்து இஸ்லாத்தின் நேர் எதிர்ப்பை சமாளிக்கச் செய்யவேண்டும். பல பத்திரிகைகளாலன்றி இவ்வேலையை செய்யமுடியுமா?

Hajig Press, Atur 1952

## வியாபார நிபந்தனைகள்.

1) V P P கிடையாது. தபால் செலவுடன் முன்பண மனுப்பிவிட வேண்டும்.

2) 10 ரூபாய்க்குக் குறையாத ஆர்டர்களுக்கு $6\frac{1}{4}$ முதல் 50% வரை கழிவு கிடைக்கும்.

3) கையிருப்பிலில்லாத நூல்களுக்குப் பதிலாக வேறு புத்தகங்கள் அனுப்பப்படும்.

4) திராவிட கழகங்களுக்கும், முஸ்லிம் சங்கங்களுக்கும், மாணவர்களுக்கும், சு. ம. இயக்க முஸ்லிம்களெனப்படுபவர்களுக்கும் பாதிவிலை.

5) குறைகளை எடுத்துக்காட்டி எழுதுவதாக வாக்களிக்கும் ஆலிம்களுக்கு இனும். இவர்கள் தபால்செலவு முன்கூட்டி அனுப்பிவிடவேண்டும்

6) பதில் விரும்புவோர் தபால் தில்லை அனுப்பவேண்டும்

7) × இந்த அடையாளங்களுள்ள நூல்கள் கையிருப்பிலில்லை

மானேஜர், இ. இ. ப., 'ஹாஜிக்ஸன்ஸ்,' ஆத்தூர் சேலம்.

—☆—

வினு:-

இ. இ. வெளியீடுகள் ஏன் எக்கும் பரவவேண்டும்?

விடை 2.

"—அறிஞர் 'குலாம்' அவர்களை தா.இ. வாயிலாக எனக்கு நீண்ட நாட்களாக தெரியும். அவரின் இஸ்லாமிய மார்க்க சம்மந்தமான ஆராய்ச்சிமிக்க அரிய கட்டுரைகள் அனேகம் படித்திருக்கின்றேன். எதிரிகளை மடக்கும் அவரின் வாதத் திறமையே அலாதி. அவரது கட்டுரைகளுக்குக் கொடுக்கப்படும் "தலைப்பே" பார்த்ததும் பரபரப்புக் கொள்ளும் வண்ணம் இருக்கும். — — — — எம்போன்ற இளைஞர்களின் உள்ளத்தில் ஆசிரியர் பா. தா. அவர்களுக்கு அடுத்த ஸ்தானத்தில் இடம் பெற்றிருப்பவர் அறிஞர் 'குலாமே'யாகும். அப்பேற்பட்டவரின் அரிய கருத்துக்கள் எங்கும் பரவவேண்டும். அவரின் கருத்துக்களைத் தாங்கி வெளிவரும் ('இஷாத்தே இஸ்லாம் வெளியீடு' என்னும்) பிரசுரங்கள் எல்லோர் கையிலும் இருக்கவேண்டும் என்பதே என் பரிபூரண எண்ணமாகும்.— — — —"

மு. ஹ. உத்மான் மரைக்காயர்,
61 பாஜுமியார் தெரு,
நாகூர், 3—5—52.

31 கடவுள் என்பதைப்பற்றிய பெரியாரின் அறியாமை 8
32 எது வியபிசாரம்——? (கு. வி 2
33 கடவுள், இஸ்லாம் & பெரியார் [என்ன சொல்லுகிறா(ர்) 5
34 விஞ்ஞானம கண்ட கடவுள்-இதுபற்றி ஈ.வெ.ரா. பெரிய 5
35 யார் காபிர்? யார் முஸ்லிம்? (கு. வி 0
36 ஹிந்து மதமும் இஸ்லாமும் ஒழியவேண்டும். என்? 7
37 ஒருவளுக்குப் பல புருஷர்கள் - ஏன் கூடாது? 5
38 முஸ்லிம்கள் ஹிந்துவாகி விடவேண்டும்— 8
39 குறளும் குர்ஆனும்——? 6
40 அடிமைப் பெண்ணை மணக்கலாகாதா? (கு. வி. 5) 8
41 ஹிந்துக்களை மணக்கக்கூடாதா? (கு. வி. 6) 6
42 முஸ்லிம பெண்கள் ஹிந்துக்களை ஏன் மணக்கலாகாது? ,, 7) 6
43 காதல் மணம். இதை குர்ஆன் தடுக்கின்றதா? (கு.வி. 8) 6
('என் மனைவி உனக்கு' என்ற கதையுடன்.)
44 தேர்தலும் முஸ்லிம்களும் 2
45 திராவிடர் கழகம் இஸ்லாத்தின் விரோதி 2
46 கோஷா-பர்தா-முகமூடி (கு வி. 9) 4
47 கோஷா—பர்தா என்றால் ——? (கு. வி. 10) 14
பெரியார் இஸ்லாத்தில் சேர்ந்தார் by மதினி 8

பயிர் | **பகுத்தறிவுப் பயிற்சிப் பண்ணை** | பிரயம் அ(ணா)

1 118 பகுத்தறிவுப் பயிற்சி வினாக்கள் .... .... .... .... .... .... .... 4
2 ஹிந்து-முஸ்லிம் பிணக்கு வளராதிருக்க யோசனை × இனும்
3 பிராமணர்களின் எதிர்காலம் by Dr. Capt. N. கிருஷ்ண ஸ்வாமி அய்யர் M B., B.S., CAS I. [அவசியமும் 8
4 பிராமணர்களின் எதிர்காலமும் கலப்பு மணத்தின் 12
(காந்தி, நேஹரு, C. R. உள்பட பல ஜாதி-மத-கொள்கை கொண்ட 30-க்கு மேற்பட்ட அறிவாளிகளின் சாதக பாதகமான அபிப்பிராயங்களடங்கியது).
5 லஞ்சமும் அது ஒழிய மார்க்கமும் ... சர்க்காருக்கு யோசனை 10
6 சமூகப் போரும் அராஜகமும் ஒழிய .... .... .... ,, .... .... .... 4
7 மதுவிலக்கு வெற்றிபெற கூட்டபாரதம்.... ... ,, .... .... .... 4
8 தீண்டாமையும் ஜாதியும் ஒழிய சேரிகளை அழித்துவிடவும் ,, 6
9 கடவுள் என்பது எதை? by Dr. M E. நாயுடு, L R C P & S (Edin,) L F P & S (Glasgow,) L M (Combe-Dublin) 8
10 கடவுள் என்பது எதை? by A. க்ரெஸ்ஸே மாரிஸன் விஞ்ஞானக் கழகத் தலைவர். ந்யூயார்க். 8
11 தேர்தலில் யாரை ஆதரிப்பது? 2

விற்பனை விபரத்துக்கு முன் பக்கம் பார்க்க.

# இஷாஅத்தே இஸ்லாம் வெளியீடுகள்.

வ. இ. வெ. — விலை அணா

1 பன்னு பறையர் 4
2 பாரதகுமாரி-விபசாரியா-இசாசா? [பின் அறியாமை 8
3 இஸ்லாத்தை ஒழிக்க முடிவு or திரு S. குஞ்சிதம் B.A., LT. 2
5 உலக சமாதானத்துக்கு வழிகாட்டி நடாத்தவல்லவர் யார்
கைநாட்டரபியா? மகாத்மா காந்தியா? 4
6 ஸோஷியலிஸ கர்த்தா யார்? மார்க்ஸா? முஹம்மதா? 6
7 அல்லா அநியாயக்காரனல்லவா? 16 திரு வீரட அடப்பது 2
8 ஸினிமாவில் நடிக்கலாமா? .... 25 ,, 3
9 துலுக்கன் யார்? திராவிடனா? 2
10 இரண்டு மனைவிகளை மணக்கவும் 10 ,, 2
11 திராவிட இயக்கம் வெற்றி பெறாது ,, 3
12 மதுவிலக்கு வெற்றி பெறுமா? 4 ,, 3
13 குர்ஆன் விளக்கம் I 11½
14 ஹதீஸ் விளக்கம் I 9½
15 அஸ்ஸலாமு அலைக்கும் ,, 1
16 தக்னியும்-லெப்பையும்-இஸ்லாமும் 9 ,, 4
17 திராவிடர் மதம் இஸ்லாம் தானா? or சுயமரியாதைக்காரர் 2
18 30 சன்மார்க்க வினாக்கள் [கள் நாஸ்திகர்களல்லவா? 3
19 இறுதி ஜகத் குரு சரித்திரம் I - (அச்சில்)
20 118 பகுத்தறிவுப் பயிற்சி வினாக்கள் 4
21 திராவிடர் தலைவர்களுக்கு இஸ்லாத்தில் சேர அழைப்பு 1
22 முஸ்லிம்பெண்கள் விபசார தோஷமுள்ள அடிமைகள் தானா? 8
23/1 சம்ஜானும்-கஞ்சிக்கு சண்டையும் × இனாம்
23/2 ஜக்காத்தும்-பிச்சைத் தொழில் வளர்ச்சியும் × இனாம்
24 204 சன்மார்க்க வினாக்கள் 6
25 இஸ்லாம் மதமும் ஏன் ஒழிய வேண்டும்? 8
26 கடவுள் இல்லை. உண்டென்றால் உணர்வதெப்படி? 2
27 கமால் இஸ்லாத்தைத் துருக்கியில் ஒழித்து விட்டார் - - -! 4
28 முஸ்லிம்கள் ஏன் திராவிட இயக்கத்தில் கலந்து கொள்ள 1
29 இஸ்லாம் மதம் செத்த மதம் - - -! [வேண்டும்? 4
30 வைப்பாட்டிக்கு குர்ஆன் அனுமதி உண்டா? குர்ஆன் விளக்கம் 2-16

(தொடர்ச்சிக்கு உள் பக்கம் பார்க்கவும்)